விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 30 வியாழக்கிழமை (16.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302





# தமிழ் மக்களின் மனித உரிமைகளை இலங்கை அரசு பாதுகாக்க வேண்டும்

## இந்தியப் பிரதமர் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையில் நிலவும் சூழ்நிலைக்கு இராணுவ வெற்றி தீர்வாகாது, இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு உட்பட்டு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்றும் இந்தியா எப்போதும் நம்புகிறது. அதேநேரத்தில் தமிழ் சிறு பான்மையினரின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கருத்துத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## இராஜினாமாக் கடிதத்தை கையளித்தார் கனிமொழி



(சென்னை)

இலங்கையில் தொடரும் மோதல்களை உடனடியாகத் தலையிட்டுநிறுத்துமாறு இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் (12ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ச் சந்தியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு சுதன்ராஜா (வயது 28) என்ற இளைஞனே ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் கிராமசேவையாளரிடம் தனது தாயாருடன் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. பிரஸ்தாப (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பல பகுதிகளில் மோதல் 7 இராணுவத்தினர் பலி; 30 பேர் காயம்

(கொழும்பு)

வடக்கின் பல பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்ந்தும் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இம்மோதல்களின் போது இருதரப்பினருக்கும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளிலேயே இந்த மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

இம்மோதல்களின் போது 7 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் 30 பேர் படுகாயமடைந்துள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

அத்துடன் இம்மோதல்களின் போது 49 விடுதலைப் புலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலிருந்து 2 கிலோ மீற்றர் தென்கிழக்காக அமைந்திருந்த புலிகளின் பதுங்கு குழிகள் மீது நேற்றுக்காலை இரண்டு தடவைகள் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

நேற்றுக்காலை 9.25 மணியளவில் ஜெட் விமானங்கள் மேற்கொண்ட இத்தாக்குதலின்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வாரகாலத்தில் 120 பேர் பாம்புக்கடிக்கு இலக்காகினர்

### கிளிநொச்சியில் மக்கள் அவலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரத்தில் இயங்கி வரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கடந்த 7 நாட்களில் மாத்திரம் 120 பேர் பாம்புக்கடிக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். 53 வயதான பெண் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவல்களை மாகாண உதவி சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பி.பிறைட்டன் தெரிவித்துள்ளார்.

பாம்புக்கடி மற்றும் வயிற்றோட்டம் ஆகியவற்றுக்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு 18 லொறிகளில் நேற்று உணவு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

வன்னிப்பகுதியில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக 200 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் 18 லொறிகளில் நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டதாக மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை தமது அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும்கூறியதாவது,

வன்னிப்பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் எமது நாட்டின் பிரஜைகளே, அவர்களுக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தேசத்துக்கு உதவுவதே இந்தியாவின் பாதுகாப்புக்கு பலம்

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கையில் சிங்கள தேசத்திற்கு உதவுவதை விட தமிழர் தேசத்திற்கு உதவுவதே இந்தியாவின் பாதுகாப்பிற்கு பலமாகும்.

எதிர்காலத்திலாவது உண்மையான நேச சக்திகளுக்கு இந்தியா உதவ முன்வரவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் ஜூனியர் விகடன் வாரமிருமுறை ஏட்டிற்கு அவர் அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கைத் தீவில் அரச படையினர், தமிழர் தாயகத்தின் மீது கொடுமையான யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர். முப்படைகளின் உதவியோடு தமிழினத்தை அழித்தொழிக்க பெரியதொரு போரை கண்மூடித்தனமாக மேற்கொண்டுவருகின்றது சிங்கள அரசு.

இந்தப் போருக்கு வெளிநாட்டு இராணுவ உதவிகளையும் பெற்று வருகிறது. தமிழ் மக்கள் தினமும் லட்சக் கணக்கில் தம்முடைய வாழ்விடங்களை விட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## அனர்த்தத்திலிருந்து தப்பிய பயணிகள் விமானம்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் நேற்றுத்தரையிறங்கிய சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானம் பாரிய அனர்த்தத்திலிருந்து தப்பியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

180 பயணிகளுடன் கொழும்பிலிருந்து சென்ற சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானம் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கும்போது ஓடுபாதையின் மையப்பகுதியை விடுத்து வேறு பாதையில் இறங்கி ஓடியதால் ஒரு ரயருக்கு பாதிப்பு ஏற்பட்டதோடு ஒரு பாதையிலிருந்த 13 மின் விளக்குகளும் சேதமடைந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

என்றாலும் (12ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் விஸ்தரிப்பு

## ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

''கடந்த மாகாணசபை தேர்தல்களின் போது அரசாங்கம் மேற்கொண்ட ஊழல்களை வெளிப்படுத்திய தேர்தல்கள் தொடர்பான கண்காணிப்பு அமைப்பான 'கபே'யின் பேச்சாளரை களனி பல்கலைக்கழகத்தில் இருந்து விலக்கியமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத் தேர்தல், சப்ரகமுவ தேர்தல் மற்றும் வடமத்திய தேர்தல்களின் பின்னர் ரஞ்சித் தென்னக்கோனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டிருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

'அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் இன்று உயர் கல்வி நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையையே இது காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதவி விலகலின் பின்னால் ஜனாதிபதி செயலகம் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ)

## குருநகர் பகுதிக்கான நீர் விநியோகம் தடைப்படல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி- வேம்படி வீதி சந்தியில் திருநெல்வேலி குருநகர் நீர் வழங்கலுக்கான நீரேற்று குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவசர திருத்த வேலை மேற்கொள்வதற்காக இன்றும் நாளையும் குருநகர் பகுதிக்கான நீர் வழங்கல் தடைப்பட்டிருக்கும் என்று மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார். (ஓ)

## கலாநிதிப் பட்டங்கள் வழங்கும் தனியார் நிறுவனங்களை தடைசெய்யக் கோரிக்கை

இலங்கையில் கலாநிதிப் பட்டங்களை வழங்கும் தனியார் நிறுவனங்களைத் தடை செய்யவேண்டும் என நாட்டின் முக்கிய பௌத்த பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கலாநிதிப் பட்டங்கள் கல்வி மற்றும் திறமைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய ஒன்று.

எனினும் இலங்கையில் அவை தராதரம் கவனிக்காது வழங்கப்பட்டு வருவதாக பீடாதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்காரணமாக இலங்கையில் கலாநிதிப் பட்டங்களுக்கான சமூக அந்தஸ்து இல்லாமல் போவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஓ)

## இந்தியக் கடற்படையினரால் கைதாகிய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய கடற்படையினால் கைதுசெய்யப்பட்டிருக்கும் 66 இலங்கை மீனவர்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக மீன்பிடித்துறை மற்றும் நீர்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் தற்போது முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் ஜீ. பியசேன தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி இந்தியக் கடற்படையினரால் கடந்த வாரம் இந்த மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ஓ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

விக்னேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியின் சிவபாத சுந்தரம் மண்டபத்தில் அதிபர் எஸ். சிவ சிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

பரிசில்களை திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா வழங்கிக் கௌரவிப்பார். (ஓ)

## பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசுத்தினம் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்துகொள்வார். அத்துடன் சட்ட வல்லுநர் எம். றெமடியஸ் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (ஓ)

## வட்டு ஐக்கிய நாணய சங்கத்தின் பவள விழா நிகழ்வுகள்

வட்டு மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் பவளவிழா 19 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சங்கக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் க.இராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூளாய் INS -GD இயக்குநர் திருமதி பொன் மலர் இராஜேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்(கணக்காய்வு) செ.கனகசபாபதி, கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தலைவர் சு.சிவசுப்பிரமணியம், சங்கானை பிராந்திய சபை தலைவர் வி. செல்வரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மலர் வெளியீட்டுரையை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி, சிறப்புரையை ''கூட்டறவின் மக்கள் பங்களிப்பு'' எனும் தலைப்பில் ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்துவர்.

கௌரவ பிரதியை வைத்திய கலாநிதி க.நடராசா பெற்றுக்கொள்வார். அத்துடன் பவளவிழாவை முன்னிட்டு வலிமேற்கு பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும், 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான அமரர் தேவா ஞாபகார்த்த சிறப்புப் பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெறவுள்ளது. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரைப்போட்டி**

கீழ்ப்பிரிவு –தே.காயத்திரி (யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி),த.நிதுஜா(யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி),ஜே.துலக்ஜா (யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.)

*மத்தியபிரிவு*

ஸ்ரீ .காருண்யா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ம.மயூரா–(வட்டு மத்திய கல்லூரி), நா. தனுஷா (யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி

*மேற்பிரிவு*

மோ.மைதிலி(யா/வட்டு மத்திய கல்லூரி), ச.கார்த்திகா( யா/வட்டு மத்திய கல்லூரி), உ.சுகிர்தா (சுழி. விக்ரோறியாக் கல்லூரி)

**பொது அறிவுப் போட்டி**

1ஆம் இடம்–ஸ்ரீ.சொரூபிகா( யா/வட்டு மத்திய கல்லூரி), 2ஆம் இடம்–தே.துவாரகன் (சுழி.விக்ரோறியாக் கல்லூரி), ம.மயூரா (வட்டு மத்திய கல்லூரி), 3ஆம் இடம்– சி. சயனுதா (வட்டு மத்திய கல்லூரி), ஆ.கௌதமி ( வட்டு மத்திய கல்லூரி), சி.டினோதினி( வட்டு மத்திய கல்லூரி)

**மாலை கட்டும் போட்டி**

பு.பிருந்தாபன்,ம.சங்கவி, ஸ்ரீ.சொரூபிகா.

**பேச்சுப்போட்டி**

*கீழ்ப்பிரிவு*

த.நிதுஜா–விக்ரோறியாக் கல்லூரி, தே.காயத்திரி–விக்ரோறியாக் கல்லூரி, ம.சங்கவி–வட்டு மத்திய கல்லூரி.

*மத்திய பிரிவு*

கா.சர்மிலா(வட்டு மத்திய கல்லூரி), க.ஜெயகண்ணன்(மூளாய் சைவப்பிரகாச வித்தி.) ச.ஜெயனுஜா (வட்டு இந்துக் கல்லூரி), இ.அபிராமி(வட்டு இந்துக் கல்லூரி)

*மேற்பிரிவு*

பொ.கிருஷாந்( சங்.சிவப்பிரகாச வித்தி.), ப.நிஜந்தா–(சுழி.விக்ரோறியாக் கல்லூரி), ம.நிஜகரன்(வட்டு இந்துக் கல்லூரி). (ஓ)

## அவசரகாலக் கல்வி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வள நிலையத்தில் UNICEF நிறுவன அனுசரணையுடன் அவசரகாலக் கல்வி இன்றும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதில் வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட 10 பாடசாலை அதிபர்கள் மற்றும் அப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் இருவரும் பங்குபற்றவுள்ளனர். (ஓ-19)

## சர்வதேச சிறுவர் தின விழா

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட கல்விப் பிரிவினால் நடாத்தப்படும் சர்வதேச சிறுவர் தின விழா எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தில் வடமராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்ளவுள்ளார். (ஓ)

## கல்லுண்டாயில் ஆட்லறித்தளம்!

(யாழ்ப்பாணம்)

அராலி வீதி கல்லுண்டாய் வைரவர் கோயிலடியிலுள்ள இராணுவ முகாமில் ஆட்லறி தளமொன்றை இராணுவம் அமைத்து வருவதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இராணுவ முகாமில் அண்மைய நாட்களாக ஆட்லறித் தளம் அமைப்பதற்கான மண் அரனை படையினர் அமைத்து வருவதுடன் கடந்த சில தினங்களாக மானிப்பாய் வீதியூடாக காக்கைதீவு –கல்லுண்டாய் வீதியில் வீதித் தடை போடப்பட்டு இரா்ணுவ வாகனத் தொடரணி செல்வதாக கூறப்படுகின்றது.

ஏற்கனவே அராலித்துறையில் ஆட்லறித் தளமொன்றை இராணுவத்தினர் அமைத்துள்ள நிலையில் கல்லுண்டாய் வைரவர் கோயில் பகுதியிலும் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக சுயாதீனத் தகவல் கூறுகின்றன. (எ-1)



யாழ்.மத்திய கல்லூரியின் இலங்கை வங்கி பாடசாலை சேமிப்புப் பிரிவு மாணவ முகாமையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றபோது இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளை பாடசாலை சேமிப்பு பிரிவு இணைப்பாளர் து.கோணேசநாதன், இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம், இலங்கை வங்கி யாழ்ப்பாண அதிமேற்தரக் கிளை பிரதான முகாமையாளர் இ.யஜேந்திரா, பாடசாலை அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், பாடசாலை சேமிப்புப் பிரிவு பொறுப்பாசிரியர் சு.சிவபாதம் நன்றியுரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

## இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்

### இ.தொ.ஐக்கிய முன்னணி தீர்மானம்

தமிழக கட்சிகளின் அழுத்தத்தினை சரியாகப் புரிந்துகொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உயர்மட்டக் கூட்டம் நுவரெலியாவில் நேற்று முன்தினம் கூடியபோதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த முன்னணியின் தலைவர் டி.வி. சென்னன் தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில் முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவம் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (ஓ)

# இன்று ஒரு தகவல்

## உருவமும் உள்ளமும்

ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தார். பல காலம் அப்படியே உட்கார்ந்து தவம் செய்து சக்தி பெற்றுவிட்டார். அதன் பின் ஒரு நாள் லேசாக கண்ணைத் திறந்து பார்த்தார்.

அவரின் கண்ணுக்கு முன்னால் ஒரு எலி பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது!

"இந்த எலி ஏன் இப்படி நடுங்குகிறது? என்று யோசித்தார். உடனே அதற்கான காரணத்தையும் கண்டு பிடித்து விட்டார்.

அவருக்கு பின்னால் ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. அதைப்பார்த்துதான் இந்த எலி நடுங்குகிறது! உடனே அந்த எலிக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்து தன்னுடைய தவவலிமையை பயன்படுத்தி அந்த எலியை ஒரு பூனையாக மாற்றிவிட்டார்.

இனிமேல் அந்த எலி பூனைக்காகப் பயப்பட வேண்டியதில்லை என்பது தான் அவருடைய எண்ணம். இப்படிச் செய்துவிட்டு அந்த முனிவர் கண்ணை மூடிக் கொண்டார். மறுநாள் காலையில் லேசாகக் கண்ணைத் திறந்து பார்த்த போது இப்பொழுது அந்தப் பூனை பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

இது இன்னும் ஏன் இப்படி நடுங்கிறது என்று பார்த்தார். பின்னால் ஒரு நாய் நின்று கொண்டிருந்தது.

இப்பொழுது இதை ஒரு நாயாக மாற்றிவிட்டால் பிரச்சனை தீர்ந்து விடும் என்று நினைத்து அதை நாயாக மாற்றினார்.

மறுபடியும் மறுநாள் கண்ணைத்திறந்து பார்த்தார். இப்பொழுது அந்த நாயும் நடுங்கிக் கொண்டிருந்தது. அதற்கு காரணம் முனிவரின் பின்னால் நின்று கொண்டிருந்த நரி!

சரி... நாயை நரியாக்கிவிடுவோம்! இனியாவது அது நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தார். அந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை. அந்த நரியும் நடுங்க ஆரம்பித்தது. என்னவென்று பார்த்தால்... பின்னால் ஒரு புலி நின்றுகொண்டிருந்தது.

முனிவர் சளைக்கவில்லை...! நரியை புலியாக்கினார். இப்பொழுது அவர் மனதில் ஒரு நிம்மதி. கண்ணை மூடினார். மறுநாள் காலையில் வழக்கம்போல லேசாக கண்ணை முழித்தப்பார்த்தால், புலி நடுங்கிக் கொண்டிருந்தது.

முனிவருக்கு கோபம் வந்து விட்டது. புலியே நடுங்கக் கூடிய அளவுக்கு அப்படி ஒரு பயங்கரமான மிருகம் இருக்குமா? ஒருவேளை சிங்கமாக இருக்குமோ...? என்று பின்னால் திரும்பிப் பார்த்தார்.

அங்கே ஒரு பூனை நின்று கொண்டிருந்தது! ஒரு பூனையைப்பார்த்து எலி பயப்படலாம். புலி பயப்படலாமா? இது ஏன் இப்படி நடுங்குகிறது? இப்பொழுதுதான் அவருக்கு ஒரு உண்மை விளங்கியது.

உருவத்தில் தான் அது புலி! உள்ளத்தில் அது இன்னும் எலிதான்! அதனால் தான் பூனையைப் பார்த்தும் எலிக்கே உரிய பயம் வந்து விட்டது! இதைப் புரிந்து கொண்ட முனிவர் புலியை மறுபடியும் எலியாக மாற்றி அதைக் காப்பாற்றி பத்திரமாக அனுப்பி வைத்தார். ஒரு விஷயத்தையும் புரிந்து கொண்டார்.

அதாவது" என்னதான் தெய்வீக வரம் கிடைத்தாலும் நான் இறைவனின பிரதிநிதியே தவிர இறைவன் அல்ல!" என்பதை உணர்ந்தார். நம்ம ஆள் ஒருவன் மனைவிக்குப் பயந்து யாரும் கண்டுபிடிக்காதவாறு கரடி வேஷம் போட்டுக் கொண்டு காட்டுக்குப் போனான். அங்கே கிடைக்கும் காய்கனிகளை சாப்பிட்டு தவம் செய்தான்.

தவவலிமை கிடைத்த பின்புதான் வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு நாள் காலையில் முழித்துப் பார்த்தால் எதிரில் நிஜமான கரடி ஒன்று வந்து உட்கார்ந்திருந்தது.

இவன் பயந்து நடுங்கிப் போனான். இவர் நடுங்க ஆரம்பித்தவுடன், அந்தக் கரடி பேசத் தொடங்கியது.

"பயப்படாதே மாமா! நான் கரடி இல்லை... உன் மச்சான்... அக்கா தான் இந்த வேஷம் போட்டு உன்னை கண்டுபிடித்து கூட்டிக் கொண்டு வரச்சொல்லி அனுப்பி வைத்தது. வேஷத்தைக் கலைத்து விட்டு வீட்டுக்குப் புறப்படு!" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசாங்கத்தின் கபட நாடகத்திற்கு ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டோம்

## ஐ.தே.க எம்.பி சஜித் பிரேமதாச

நாட்டை கூறுபோடும் பயங்கரவாதிகளுக்கு எதிராக எமது பாதுகாப்புப் படையினர் பாரிய பதிலடி கொடுத்த வண்ணமுள்ளனர் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்து யுத்த களத்தில் போரிடும் முப்படையினருக்கு எமது ஆசீர்வாதமும் ஒத்துழைப்பும் எப் போதுமே உண்டு. ஆனால் யுத்தத்துக்கு தூபம் போட்டு அதன் மூலம் பிழைப்பு நடத்த நினைக்கும் இந்த அரசாங்கத்தின் கபட நாடகத்துக்கு நாம் ஒரு போதும் இடங்கொடுக்கமாட்டோம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஹிரியால தேர்தல் தொகுதியில் செயற்படுத்தப்படவுள்ள 'ஜனசுவய' அபிவிருத்தித் திட்டம் குறித்து அப்பகுதி மக்களுக்கு தெளிவுறுத்தும் கூட்டம் ஒன்று இப்பாகமுவ நகரில் அண்மையில் இடம் பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அங்கு அவர் மேலும் உரை நிகழ்த்துகையில், இன்று சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஆகியவற்றை உவமைகளாகக்காட்டி அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளே இலங்கையில் காணப்படுகின்றனர். அவர்களுக்கு தேவைப்படுவது மக்களை முட்டாள்களாக்கி அரச பதவிகளில் அமருவதாகும். ஆனால் நானோ உண்மையை பேசி, நேரிய அரசியல் பாதை வழியாக செல்லவே விரும்புகின்றேன்.

மக்களுக்கு பசப்பு வார்த்தைகளையும் பொய்யான உறுதிமொழி களையும் வழங்கி அவர்களை ஏமாற்றுகின்ற அரசியல் அதிகாரமே இப்போது எமது நாட்டில் மேலோங் கியுள்ளது. ஆனால் எமது மக்கள் தற்போது இவ்வாறான போலியான அரசியல் வாதிகளை இனங்கண்டுள்ளார்கள். மக்களை ஒவ்வொரு நாளும் ஏமாற்றுவதென்பது முடியாத காரியம்.

நாட்டின் பாதுகாப்பு குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கதைக்கின்றனர். எனினும் எமது இராணுவ வீரர்கள் தமது மனைவி, பிள்ளைகள், பெற்றோர் அனைவரிடமுமிருந்தும் விடை பெற்று யுத்த களத்தில் போர் புரிகின்றனர்.

எனது தந்தையின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் இரு யுத்தங்கள் இடம் பெற்றன. ஆயினும் அவர் மக்களுக்கான உதவி செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்களை கைவிட வில்லை. ஒருபுறம் யுத்தத்தை நடத்திக் கொண்டு மறுபுறம் மக்களுக்கு வீடு, வாசல், தொழில்வாய்ப்புக்கள், பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை ஆகியவற்றை தாராளமாக பெற்றுக் கொடுத்தார்.

நகரங்களின் தொழிற்துறைகளை கிராமங்களுக்கும் உள்வாங்கினார். இரண்டு யுத்தங்கள் அன்று இடம்பெற்ற பொழுதும் அவர் மக்களை நட்டாற்றில் நிர்க்கதியாக் காமல் நாட்டையும் மக்களையும் காப்பாற்றினார்.

ஆனால் இன்றைய மஹிந்தவின் ஆட்சியில் நடப்பதோ அவற் றுக்கு நேர்மாறானது என்பதை நான் கூறித்தான் நீங்கள் அறிய வேண்டுமென்பதில்லை. நாட்டின் யதார்த்த நிலையை எமது மக்கள் நன்கறிவார்கள் என்றார். ஓ

# யுத்தச் செலவுகள் நிமிடத்துக்கு 18 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும்

## ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் எவ்வித மாற்றங் களும் ஏற்படப்போவதில்லை. கடந்த வருடத்தை விட இனிவரும் காலங்களில் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்திற்கு செலவிடப் படும் தொகை நிமிடத்திற்கு 18ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை அக்குரசைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த வருடத்தில் நிமிடமொன்றுக்கான யுத்தச் செலவுகள் ஆறாயிரத்து 840 ரூபா வீதம் 68.4 பில்லியன் ரூபா யுத்தத்துக்காக செலவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் 2009ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 166 பில்லியன் ரூபா யுத்தத்துக்கென ஒதுக்கப் பட்டிருக்கின்றது. இதன்படி எதிர் காலத்தில் யுத்தச் செலவுகள் நிமி டத்துக்கு 18 ஆயிரம் ரூபாவாக அதி கரிக்கப் பட்டிருக் கின்றது என்று கூறினார்.

# முல்லைத்தீவில் இருந்து படகு மூலம் வந்து 39 பொதுமக்கள் கடற்படையினரிடம் தஞ்சம்

முல்லைத்தீவு அரச கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வந்த 39 பொதுமக்கள் நேற்று முன்தினம் புல்மோட்டை கடற்படை முகாமில் தஞ்சமடைந்துள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவிலேயே இவர்கள் கடற்படை யினரிடம் தஞ்சமடைந்ததாகவும் முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதியிலிருந்து கடல் மார்க்கமாக இரு படகுகள் மூலம் இவர்கள் வந்தடைந் துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்தடைந்த 39 பேரில் 14 பெண்களும் 12 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதன் பின்னர் அவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் இராணுவ பேச்சாளர் மேலும் கூறினார். ஓ

# இராசி பலன்

16.10.2008
(புரட்டாதி 30, வியாழக்கிழமை)
துதியை முன்னிரவு 10.30 மணிவரை
பரணி பின்னிரவு 4.10மணிவரை
இராகுகாலம் 1.32-3.02மணிவரை
சுபநேரம் 7.32 -9.0 2 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெல்வு, குடும்பக் கவலை. |
| இடபம் | புதிய முயற்சி, திடீர் நன்மை, தெய்வ சிந்தை, நல்ல வரவேற்பு. |
| மிதுனம் | அதிகாரிகள் சந்திப்பு, சுபசெலவு, முயற்சி கைகூடும், பிரயாணம். |
| கடகம் | சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வ நம்பிக்கை. |
| சிங்கம் | உற்சாகம், எடுத்த காரியம் கைகூடும், மேன்மை, பிறர் உதவி. |
| கன்னி | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச் சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, காரிய அனுகூ லம், போசன சுகம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, நல்ல காரியம், அதிகாரம், போசன சுகம். |
| மகரம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், திடீர் நன்மை, ரோக நிலை. |
| கும்பம் | சுபசெலவு, காரிய இடையூறு, புதியவிபயம், நண்பர்கள் சந்திப்பு |
| மீனம் | செய் தொழில் விருத்தி, காரிய நன்மை, பிறர்உதவி, குடும்பசுகம். |

வளவன்

# சட்ட விரோதமாக குவைத்தில் தங்கியிருந்த 50 பேர் நாடு திரும்பினர்

விசா இல்லாமலும் சட்டவி ரோதமாகவும் குவைத்தில் தங்கி யிருந்த இலங்கையர்களுள் 50 பேர் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியுள்ளவர்கள் தமது சொந்த நாடுகளுக்கு திரும்புவதற்காக அந்நாட்டு அரசாங்கம் மன்னிப்புக் காலமொன்றை வழங்கியுள்ளது.

அதன் பிரகாரம் நாடு திரும்புவதற்கு இலங்கை தொழிலாளர்கள் 2 ஆயிரத்து 200 பேர் விருப் பம் தெரிவித்திருந்தனர். அவர் களுள் 50 பேரே நேற்று முன் தினம் தாய் நாட்டை வந்தடைந் துள்ளனர்.

இதேவேளை, இன்று 15 ஆம் திகதியுடன் முடிவடையும் மன்னிப்புக் காலத்தை மேலும் நீடிக்குமாறு குவைத் அரசாங்கத்தை பல்வேறு அமைப்புகள் கோரியுள்ளன. ஓ



யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஹொக்கி சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்ட ஹொக்கி போட்டியில் கலந்து கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி வீராங் கனைகளோடு கல்லூரி அதிபர் - திருமதி : சிராணி மில்ஸ் பயிற்றுவிப்பாளர் ப. தர்மகுமாரன் ஆகியோரை படத்தில் காணலாம் (படம் : கோபி)

## பரீட்சைக்குத் தோற்றியோரில் 32வீதமானோர் பல்கலைக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

சென்றவருடம் நடைபெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த சண்டிலிப் பாய் இந்துக்கல்லூரி மாணவர்களில் 13 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள னர். இது பரீட்சைக்குத் தோற்றிய மாண வர்களில் 32% ஆகும்.

இக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட 10 வருடங்களில் அதிகளவு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வது இதுவே முதல் முறையென கல்லூரி அதிபர் தெரிவிக்கின்றார். (ஓ)

## சமய பாடப்பரீட்சை

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை வருடாவருடம் பாடசாலை மாணவரிடையே நடாத்திவரும் சமய பாடப் பரீட்சை இம் மாதம் 26 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை ரீதியாக நடாத்தப்படவுள்ளது.

பரீட்சைக்கான சுட்டிலக்கங்கள் அந் தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சபையின் பரீட்சைச் செயலாளர் கலாநிதி தி.வேல்நம்பி தெரிவித் துள்ளார். (ஓ)

## கோதுமை மா விநியோகம்

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தின் சகல கிளைகளிலும் இன்று வியாழக் கிழமை முதல் கோதுமை மா விநியோகிக் கப்படும் என கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-134)

## புதிய வாயில் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கல வன் பாடசாலையின் புதியவாயில் திறப்பும், பாடசாலை பெயர் வளைவு திரைநீக்கமும் அதிபர் கா.இராமஜெயம் தலைமையில் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அவர்க ளால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்பட வுள்ளது.

இந்நிகழ்விற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை சமூகம் ஆகியன அனு சரணை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. (ஓ-19)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறை -குருநகர் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை திருநகர் மாணவர் படிப்பகத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30மணிவரை பாரதி சன சமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்பட வுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங் களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப் பூசி யினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 15

ஒரு தேசிய இனத்தவராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

உறுப்புரை- 16

முழு வயதடைந்த ஒவ்வொருவரும் திருமணம் செய்வதற்கும் குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமையுடையவர்களாவர்.

## வர்ணப்புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணப் பெட்டகம்-1

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை நடத்தும் மாபெரும் வர்ணப் புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணப் பெட்டகம் -1 நேற்று ஆரம்பமாகி இன்றும், நாளையும் நாளை மறு தினமும் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4மணிவரை வலி-வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலாளர் சு. முரளிதரன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர் திருமதி . ப. திலகநாயகம், ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் க. குண ராசா ,சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி, யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணம்.

யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். விழாவுக்கு மங்கல வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும். நிகழ் வில் ஆவணப்படுத்தலில் *யாழ்ப்பாணப் பெட்டகம்-1* எனும் விடயம் பற்றி ந. விஜ யசுந்தரம், *வாழும் கலையே எம்மை ஆளும் கலை* எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா ஆகியோர் சிறப்புரை வழங்கவுள்ளனர். (ஓ)

## வலிகாமம் கல்வி வலயத்தில் உளவளத்துணை நிலையங்கள்

(வட்டுக்கோட்டை)

அடிப்படைக் கல்வித் துறை அலகு (BESU) வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிலைய மட்ட உள சமூக ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு இடையிலான உளவளத் துணை நிலையங்கள் திறக்கப்பட்டு உள சமூக ஆதரவுச் செயற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில் யாழ். மாவட்டத்தில் தற்போது 18 உளவள நிலை யங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமக் கல்வி வலயத்தில் 3 கோட் டங்களில் 6 பாடசாலைகளில் இவ் நிலை யங்கள் செயற்பட்டு வருகின்றன.

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் சண்டிலிப்பாய் கோட் டத்தில் பிரான்பற்று கலைமகள் வித்தியா லயத்திலும், நவாலி மகா வித்தியாலயத் திலும் செயற்பட்டு வருகின் றது.

தெல்லிப்ப ளைக் கோட்டத்தில் வீமன் காமம் மகாவித்தி யாலயம்,ஏழாலை சைவ மகாஜன வித்தியா லயம், அருணோதயாக் கல்லூரியிலும் இந் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இவ் உளவளத்துணை நிலையங்கள் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் முற்பகல் 1 மணிவரை செயற்பட்டு வருகின்றன.

மேற்படி நிலையங்கள் ஊடாக அனைத் துப் பாடசாலை சமூகத்தினது உள சமூக ஆதரவை மேம்படுத்தும் முகமாக மாணவர் கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக் கான பல செயற்றிட்டங்கள் திட்டமிட்டு நடை முறைப்படுத்தப்பட்டு வருவதனை அவதா னிக்கக் கூடியதாகவுள்ளது. (ஓ-27)




## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தினரால் வாசகர்களை நோக் கிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச வீடுகளுக்கு நேரடியாக சென்று நூலகம் சம்பந்தமான விழிப்புணர்வை எடுத்துக்கூறி ஒரு வீட்டில் இருந்து ஒருவராவது நூல கத்தின் உறுப்பி னராக சேர வேண்டும் என நூலகர், நூலக ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின் றனர்.

தேசிய வாசிப்பு மாத காலத்தில் உறுப்பி னராக சேர்பவர்களுக்கு கட்டணம் குறைக் கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட உள்ளதாக வும், நூலகத்தின் பத்திரிகைப் பகுதி, சிறுவர் பகுதி, உசாத்துணைப் பகுதி, இரவல் வழங் கும் பகுதி என்பவற்றை மாணவர்கள், பொது மக்கள் உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும எனவும் கொக்குவில் பொது நூலக நூலகர் கேட்டுள்ளார். (ஓ-36)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடா கிளையினர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள பாடசாலையில் உள்ள மாணவர் களுக்கு வழங்கியுள்ளனர்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, வடக்கு கலவன் பாடசாலை, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் இவ் உதவியைப் பெற் றுள்ளனர்.

சமூக சேவையாளர் ச. நித்தியானந்தம், ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ச. கந்தசாமி ஆகி யோர் மாணவர்களுக்கு இவற்றை பகிர்ந் தளித்தனர். (ஓ)

## ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக் கிராம உப அலுவலக ஆனைக்கோட்டை பொது நூலகம் வாசிப்பு மாதத்தை ஒட்டி நடாத்தும் *ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்* எனும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வருமான மேற்பார் வையாளர் சி.ஹரிமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபரும் *ஆழப் பதிந்த வேர்கள்* மற்றும் சிறுவர் சிந்தனைக் கவிதைகள் எனும் நூல்களில் நூலாசிரியரு மான ஆ.சி.நடராசா விழா நாயகராக கௌர விக்கப்படவுள்ளார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆனைக் கோட்டை அ.மி.த.க பாடசாலை அதிபர் சி. நாகையா, சிறப்பு விருந்தினர்களாக மானிப் பாய் வலி தென்மேற்குப்பிரதேச சபை உள் ளூராட்சி உதவியாளர் திருமதி ஜெ.சோம ராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் விமர்சன உரையை நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா. வசந்தகுமார் ஆற் றவுள்ளார். (ஓ)

## தமிழ் மொழிப்பரீட்சையும் சைவநெறித் தேர்வும்

(யாழ்ப்பாணம்)

2008 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர (O/L) மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் சைவ நெறித் தேர்வு நவம்பர் 1 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும் என யாழ். சைவபரிபாலன சபை தேர்வுச் செயலர் இரா. செல்வவடிவேல் அறிவித் துள்ளார். (ஓ)


## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி எஸ்.ஜெயநாயகி தலைமை யில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினரான மேலதிக மாவட்ட நீதிபதி (பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி) A.G. அலெக்ஸ்ராஜா கலந்து கொள்வார்.

பரிசில்களை திருமதி L.G. அலெக்ஸ் ராஜா வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-19)


இ.போ.ச.(வடக்கு) 50 ஆவது ஆண்டு பொன்விழா சிறப்புமலர் வெளியீட்டில் இ.போ.ச.(வடக்கு) இளைப்பாறிய ஊழியர்களான எஸ்.குமாரகுலசிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா, ஐ.மாசிலாமணி, வி.இராசதுரை, க.கனகராசா (ஜே.பி) எஸ்.வி ஆறுமுகசாமி (ஜே.பி) ஆகியோர் கௌரவிக்கப்பட்ட நிகழ்வுப் படங்கள்.

# நோத்முதல் கோபல்லவா வரை (126)



## திருத்தப்பட்ட சட்ட சபை

*இந்த அமைப்பிலிருந்த பெருங்குறைகளிலொன்று அதிகாரமும் பொறுப்பும் வெவ்வேறிடங்களிலிருந்தமையாம்.* சட்ட சபை யின் உத்தியோக அங்கத்தவரிடம் அதிகாரம் விடப்பட்டது. சட்டசபைக்குக் கட்டுப்படாமலும், மக்கள் பிரதிநிதிகளாகாமலும் இருந்த அவ்வுத்தியோகத்தர் குடியேற்ற மந்திரியா ரால் நியமிக்கப்பட்டு ஆள்பதிக்கே கட்டுப்பட் டிருந்தார்கள். ஆள்பதியிடமே சட்ட நிர்வாக அதிகாரமும் இருந்தது. சபையில் பெரும் பான்மையினரான உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர், அரசாங்கத்தை அமைத்து நடத்த இயலாதவராய் இருந்தார்கள். *இந் நிலையில் ஆள்பதி சிறுபான்மைக் கட்சித் தலைவர் பிரதம மந்திரியாய் இருந்த நிலையிலிருந்தார்.*

தேசிய மகாசபையின் பெயரால் ஆள் புலத் தொகுதிவாரியாகப் பிரநிதித்துவங் கோரிய பெரும்பான்மைச் சிங்களவரின் கோரிக்கையை நிறைவேற்றினால், அவர் கள் கரைநாட்டுத் தொகுதிகளிலும் மலை நாட்டுத் தொகுதிகளிலும் அதிக பிரதிநிதித் துவம் பெற்றுச் சட்டசபையில் சிறுபான்மை யினரை நலியச் செய்யலாம் எனத் தாம் அஞ்சுவதாக ஆள்பதி மனிங் தமது அறிக்கையில் குடியேற்ற மந்திரியார் டிவன்சயர் பிரபுவுக்கு எழுதினார். டிவன்சயர் பிரபுவும் அதே கருத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமும் இருத்தல் வேண்டுமென அனும தித்தார்.

தேசிய மகாசபையினர் கோரிய திருத்தங்களுள் வாக்குரிமையைப் பலருக்கு வழங்குவதற்கும், தெரியப்பட்ட வாசகர் சட்டசபைக்குத் தலைமை வகிப்பதற்கும் ஆள்பதி மனிங் தம் மறுப்பைத் தெரிவித்தார். ஆனால் குடியேற்ற மந்திரியார் டிவன்சயர் பிரபு அவற்றை வழங்கியதோடு மக்கள் தேவைகளை நிறைவு செய்யவும் வழிவகுத்தார்.

### மீள் பார்வை

டிவன்சயர் -மனிங் திருத்தத்தின் வண்ணம் சட்டசபை அமைவதற்குக் கழகத்துப் பணி 1923 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் விதித்த பிரகாரம் சட்டசபை புதுப்பிக்கப்பட்டது. அதிலே ஆள்பதி சட்ட நிர்வாகசபை மூலமும், சட்ட நிரூபணசபை மூலமும் உதவி பெறத் தக்கதாக இருந்தார். சட்டசபையில் உத்தியோக அங்கத்தவரும் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரும் என இரு பகுதியார் முன்போலவே இருந்தார்கள்.

உத்தியோக அங்கத்தவர் 12பேர், அவர்கள் முன்போல ஆள்பதியால் குடியேற்ற மந்திரியாரின் அங்கீகாரத்தோடு நியமிக்கப் பெற்றவர்கள். அவர்கள்,

1.பிரதம படைத்தலைவன்
2. குடியேற்றச் செயலாளர்
3.சட்டத்துறை நாயகம்
4.வருமானப் பகுதித்தலைவர்
5. இறைசேரி நாயகம்

என்னும் இவர்களோடு வேறு உத்தியோகத்தரும் நியமிக்கபட்டனர். திருத்தப்பட்ட சட்டசபையின் அமைப்பும் உத்தியோக அங்கத்தவரும் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளும் அவர்களின் தொகுதிகள் விபரமும் பின்வருமாறு,

தலைவர் -மாட்சிமை தங்கிய சேர் வில்லியம் மனிங் அவர்கள்,

1. *குடியேற்றக் காரியதரிசி*-சிசில் கிளிமெந்தி
2. *சட்டத்துறை நாயகம்*-எல்பின்ஸ்ரோன்
3. *வருமான அதிகாரி*-E.B. அலெக்சாண்டர்
4. *இறைசேரி நாயகம்*- W.W.வுட்ஸ்
5. *கல்வியதிகாரி*-மாக்கிறே
6. *மத்திய மாகாண அதிபர்*-W.L கிண்டர்ஸ்லி
7. *பகிரங்க வேலை இயக்குநர்*-J.ஸ்ராச்சன்
8. *சுங்க அதிபர்*- W.T.சதேன்.
9. *இந்தியத் தொழிலாளர் கட்டுப்பாட்டதிகாரி*- W.E.வெயிற்
10. *சட்ட அறிஞர் நாயகம்* -M.T.அக்பார்
11. *வைத்திய அதிகாரி*-J.F.E.பிரிஜ்ஜர்

**சாதாரண தொகுதிகள் 23**

*உபதலைவர்*

1. கொழும்பு தெற்கு -கௌரவ யேம்ஸ் பீரிஸ்
2. வடமாகாணம் வடபகுதி -கௌரவ சேர் பொன்னம்பலம் இராமநாதன்
3. வடமாகாணம் மேற்கு- கௌரவ வைத்திலிங்கம் துரைசுவாமி
4. வடமாகாணம் கிழக்கு - கௌரவ கதிரைவேற் பிள்ளை பாலசிங்கம்
5. வடமாகாணம் தெற்கு- கௌரவ ஆறுமுகம் கனகரத்தினம்
6. வடமாகாணம் மத்தியபகுதி -கௌரவ சுப்பிரமணியம் இராசரத்தினம்
7. ஊவாமாகாணம்-கௌரவ D.H. கொத்தலாவல
8. களுத்துறை-கௌரவ E.W. பெரேரா
9. மட்டக்களப்பு-கௌரவ E.R. தம்பிமுத்து
10. மத்தியமாகாணம் நகர்-கௌரவ A.C.G. விஜயசுன்
11. மத்தியமாகாணம் நாடு-கௌரவ G.E. த.சில்வா
12. தென்மாகாணம் மேற்கு-கௌரவ C.W.W. கன்னங்கரா
13. தென்மாகாணம் மத்திய பகுதி -கௌரவ F.A. ஒபயசேகரா
14. தென்மாகாணம் தெற்கு -கௌரவ V.S. விக்கிரமநாயக்க
15. திருகோணமலை மாவட்டம்- கௌரவ M.M. சுப்பிரமணியம்

**க:சி.குலரத்தினம்**

16. கொழும்பு வடக்கு-கௌரவ C.E. விக்டர் கொறியா
17. கொழும்புமாவட்டம்-கௌரவ D.B.ஜயதிலக
18. வடமேல் மாகாணம் மேற்கு - கௌரவ C.H.Z.பர்ணாந்து
19. வடமேல் மாகாணம் கிழக்கு - கௌரவ G.E.மதுவல
20. வடமத்திய மாகாணம் - கௌரவ H.R.பிறீமன்
21. கேகாலை மாவட்டம் -கௌரவ A.F. மொலமுரே.
22. இரத்தினபுரிமாவட்டம்-கௌரவ A.H.E. மொலமுரே
23. கொழும்பு தமிழ்தொகுதி-கௌரவ அருணாசலம் மகாதேவ.

(தொடரும்)







அண்மையில் கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட வாணிவிழா மற்றும் பரிசளிப்பு வைபவத்தில் இடம்பெற்ற மாணவிகளின் கலை நிகழ்வினையும், பிரதம விருந்தினரான பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் மற்றும் தலைவர் திருமதி சு.குணராசா ஆகியோர் பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் பொருளாதார வளர்ச்சியும் (1)

**தெற்காசியப் பிராந்தியம் முரண்பாடுகள், உயர்ந்த வரவு செலவு திட்டப் பற்றாக்குறைகள், ஊழல் போன்ற பல்வேறு தடைகளின் மத்தியில் குறிப் பிடத்தக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பு என்பவற்றை அடைந்துள்ளது. இதற்கு 1990களில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சிர்திருத் தங்கள் பிரதான காரணமாக அமைகின்றன. இப் பிராந்தியத்தின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதமானது 10%மாக அதிகரிக்கப்படுமாயின் அதன் வறுமை வீதம் தனி இலக்கத்திற்கு (Single Digit)2015 அளவில் குறையும் என எதிர்வு கூறப்படுகின்ற போதும் இவை இரண்டும் சவால்கள் நிறைந்த பணிகள் ஆகவே உள்ளன.**

தெற்காசியாவில் வறுமையைக் குறைத்தல் தொடர்பில் வருமான சமமின்மை, குறைந்த மட்ட மானிட அபிவிருத்தி நிலை மற்றும் நல்லாட்சி இன்மை போன்றன தடைகளாகக் காணப்படுகின்றன.

அவ்வாறே இப் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டுமாயின் உயர்ந்த வருமான சமமின்மை (Income inquality), முரண்பாடுகள் மற்றும் உயர்ந்த வரவு செலவுத் திட்ட பற்றாக் குறைகள் மற்றும் ஒப்பீட்டு அடிப்டையில் கிழக்காசியாவை விட பொருளாதார அபிவிருத்தியில் தாழ்ந்த நிலை போன்ற சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்குமென கூறப்படுகிறது.

இவ்வாறான தடைகள் மற்றும் சவால்களை வெற்றிகொள்வதற்கு பொருத்தமான கொள்கைத் தெரிவுகளை முன்னெடுக்க வேண்டும்.

அந்த வகையில் உற்பத்தி திறனை அதிகரித்தல், முதலீடுகளை கவருதல், உழைப்பின் தரத்தினை மேம்படுத்துதல், சமமின்மையை குறைத்தல் மற்றும் நாடுகளுக்கிடையில் வளப் பகிர்வை ஊக்குவித்தல் போன்ற முக்கிய பொருளாதார பரப்புக்களை உள்ளடக்கிய கொள்கைகளை வகுக்க வேண்டும். இந்த வகையில் இக் கட்டுரை தெற்காசிய நாடுகளது பொருளாதார வளர்ச்சி, வறுமை மற்றும் மானிட அபிவிருத்தி நிலை, அவசியமான கொள்கைத் தெரிவுகள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி சார்க் நாடுகளது பொருளாதார நிலையினை விளக்க முனைகிறது.



தெற்காசியப் பிராந்தியம் ஆசியக் கண்டத்தில் தெற்காக அமைந்துள்ள பாரிய முக்கோண வடிவ தீபகற்பமாகும். புவியியல் ரீதியாக வடக்கே இமயமலையையும், அதனோடிணைந்த மலைத்தொடர்களையும், கிழக்கே வங்காள விரிகுடாவினையும், மேற்கே அரபிக் கடலையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

இப்பிராந்தியம் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்காளதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளை கொண்டுள்ளதுடன் இப்பிராந்தியத்தை பொருளாதார ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்தும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்கா சிய அமையம் - சார்க் (SAARC -South Asian Association for Regional Co-operation) அமைப்பில் இந் நாடுகளுடன் கடந்த ஆண்டு ஆப்கானிஸ் தானையும் இணைத்துக் கொண் டமை குறிப்பிடத்தக்க ஓர் விடய மாகும். இது ஏறத்தாழ 4.4 மில்லி யன் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை அல்லது புவி மேற்பரப்பில் 3.8 சதவீதத்தை உள்ளடக் கியுள்ளது.

சார்க் நாடுகளை உள்ளடக்கிய தெற்காசிய பிராந்தியம் பொதுவான சில அரசியல் பொருளாதார. சமூக கலாசார இயல்புகளை கொண்டுள்ளது. அவற்றினை ஆறு முக்கிய குணாம்சங்களினூடாக அடையாளப்படுத்த முடியும்.

❖ குறைந்த வருமானம், சமத்துவமின்மை, சுகாதார வசதியின்மை மற்றும் பற்றாக் குறையான கல்வி போன்றவற்றால் குறைந்த மட்ட வாழ்க்கைத்தரம் (Standard of living)

❖ குறைவான உற்பத்தி திறன் (Productivity)

❖ உயர்ந்த சனத்தொகை வளர்ச் சியும் அதிகரித்த தங்கியிருப் போர் சுமையும்.

❖ உயர்ந்த அதிகரிக்கும் வேலையின்மை (Un employment) மற்றும் கீழ் உழைப்பு(Under employment)

❖ விவசாய உற்பத்தியில் தங்கி யித்தலும் முதனிலை உற்பத்தி களின் ஏற்றுமதியும்.

சர்வதேச உறவுகளில் ஆதிக்கம் செலுத்தும் தன்மை(Dominance), தங்கியிருத்தல் (Dependence) மற்றும் ஊறுபடத்தக்க / பாதிப்படையக் கூடிய இயல்பு ( Vulnerability) என்பன காணப்படுதல், போன்றன முக்கிய பொதுவான குணாம்சங்களாக காணப்படுகின்றன.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

### நம்பிக்கையூட்டும் பொருளாதார வளர்ச்சி

தெற்காசியப் பொருளாதாரம் கடந்த ஐந்து வருடங்கஹில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது. பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு மற்றும் பாகிஸ்தான் ஆகியன சராசரியாக வருடாந்தம் 5% இற்கு அதிகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

(தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
## ஆய்வு அபிவிருத்திப் பிரிவு
## க.பொ.த. உயர்தர பரீட்சை 2009
## பாட அலகு ரீதியான விளக்கங்கள்

# உயிரியல்
# CORE BIOLOGY – CELL CYCLE

ரி. பாலசுப்பிரமணியம்

## அமைப்புக்கட்டுரை

v.விலங்குகளிலும், தாவரங்களிலும் ஒடுக்கற்பிரிவு நிகழக்கூடிய சந்தர்ப்பமொன்றினைக் குறிப்பிடுக?


1. விலங்குக் கலம்

.................................................................................................

2. தாவரக் கலம்

.................................................................................................

C. தாவரக் கலமொன்றில் நடைபெறும் இழையுருப் பிரிவின் போது அரை நிறவுருக்களின் மையப்பாத்திற்குமிடைப்பட்ட தூரத்தை வரைபு **B** உம், கலத்தின் முனைவுகளிற்கும் அரைநிறவுருக்களின் மையப்பாத்திற்குமிடைப்பட்ட தூரத்தை வரைபு **A** உம் எடுத்துக் காட்டுகின்றது.




i. 15 வது நிமிடத்தில் ஆரம்பித்த கருப்பிரிவுக்குரிய அவத்தை எது?

.................................................................................................

ii. வினா (i) இல் நீர் குறிப்பிட்ட கருப் பிரிவுக்குரிய அவத்தையின் முக்கியத்துவம் யாது?

.................................................................................................

iii. விலங்குக் கலமொன்றில் கதிர் உடல் அல்லது கதிர் உபகரணத்தை ஆக்கும் கட்டமைப்புக்கள் எவை?

1.................................................

2 ..............................................


iv. வினா (iii) இல் நீர் குறிப்பிட்ட கட்டமைப்புக்களை உருவாக்கும் புரதம் எது?

.................................................................................................

v. கலம் பிரிவடையும் தளம் எதனால் நிர்ணயம் செய்யப்படுகின்றது?

.................................................................................................

D. குறித்தவொரு அங்கியில் இரு புணரிகளின் கருக்கட்டலைத் தொடர்ந்து உருவாகும் நுகக் கலமானது இழையுருப்பிவினால் முளையமாக விருத்தியடையும் போது கலக்கருவிலுள்ள DNA யின் அளவு மாற்றமடைகின்ற விதமானது வரைபாகக் காட்டப்பட்டுள்ளது. (DNA யின் அளவு எதேச்சையான அலகுகளில் தரப்பட்டுள்ளது)




i. A,B,C ஆகிய இடங்களில் கருப்பிரிவின் எவ் அவத்தை நிகழ ஆரம்பிக்கும் எனக் குறிப்பிடுக?

A.................................... B....................................

C....................................

ii. வரைபில் ஓ எனக் குறிக்கப்பட்ட செயற்பாடு நடைபெறும் கலவட்டத்தின் குறிப்பான அவத்தை எவ்வாறு அழைக்கப்படும்?

.................................................................................................

iii. வரைபில் காட்டப்பட்ட DNA இனது அளவில் அதிகரிப்பு ஏற்படக் காரணமான செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக?

1 ..............................................

2. ..............................................

iv. ஆய்வு கூடத்தில் இழையுருப்பிரிவின் நிலைகளைச் சாயமிட்டு அவதானிப்பதற்கு பயன்படுத்தக் கூடிய இழையம் ஒன்றினைக் குறிப்பிடுக?

.................................................................................................

(முற்றும்)

# உடல் எடையை குறைக்க வழிகாட்டும் இணையத்தளம்

நம்மில் பலருக்கு 40 வயதை தாண்டி விட்பாலே வரும் பெரும் பிரச்சினை உடல் எடை கூடுவது தான். இன்றைய காலகட்டத்தில் இப்பிரச்சினை 30 வயதிலேயே பலருக்கு வந்து விடுகிறது. உடல் உழைப்பின்றி எந்த நேரமும் நாற்காலியிலேயே கொம்பியூட்டர் முன் அமர்ந்து பணியாற்றுவது தான் இப்பிரச்சினைக்கு மூலகாரணம். இவர்களுக்கு சில விடயங்களை தெளிவுப்படுத்தி கற்றுத் தருவதற்கென்றே ஒரு இணையத் தளம் இயங்குகிறது.

உடல் எடையைக் குறைக்க இந்த இணையத்தளம் எடுத்துச் சொல்லும் வழி புதியதாய் இருக்கிறது. இந்த இணையத்தளத்தில் உடற்பயிற்சி செய்யுங்கள். உணவை குறை




இவ்வார இணையத்தளம்

யுங்கள் தண்ணீர் மட்டுமே குடியுங்கள், பழச்சாற்றில் மட்டுமே உயிர் வாழச் கற்றுக் கொள்ளுங்கள் என்றெல்லாம் வழி சொல்வதில்லை இத்தளத்தின் பிரிவுகள் சற்று வித்தியாசமானவையாகும்.

### Diet and weight loss Tips

முதலாவதாக இந்தப் பிரிவு உள்ளது. உணர்வுப்பழக்கம் மற்றும் எடை குறைப் பதற்கான ஆலோசனைக்கானது. இந்தப் பிரிவு.

இதில் இந்தப் பொருள் சம்பந்தப்பட்ட பல கட்டுரைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றை படிப்பதன் மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

### Tutorial

இந்தப் பிரிவு உங்கள் உணவுக் கட்டுப்பாட்டிற்கு ஒரு முடிவைத் தெரிவித்து அதற்கு பதிலாக பிரக்டிக்லாக என்ன செய்ய வேண்டும் என வழி சொல்கிறது.

### Calories Burned Calculator

இங்கு உங்களுடைய உடல் மாஸ் இன்டெக்ஸ் **BMI (Body Mass Index)** என்பதற்கான விளக்கமும் அதனை எப்படி கணக்கிடுவது என்பதற்கான கல்குலேட்டரும் தரப்படுகிறது. ஒவ்வொரு செயலுக்கும் என்ன கலோரி செலவாகிறது? என்பதற்கான ஐந்து வகை கால்குலேட்டர்கள் இதில் தரப்பட்டுள் ளன.

### Food Calories &Nutrition Calculator

இந்த கல்குலேட்டரில் முதலில் ஹெல்ப் பட்டனை அழுத்தி தொடங்கலாம். ஏனெனில் அப்போது தான் நீங்கள் என்ன செய்திட வேண்டும் என தெரிந்து கொள்ளலாம். உணவு வகைகளை இதில் இன்புட் செய்தால் அதன் கலோரி கணக்கில் விடை கிடைக்கிறது.

### Weight Loss Calculator

இப்பிரிவில் மூன்று கல்குலேட்டர்கள் உள்ளன. எவ்வளவு காலத்தில் நீங்கள் விரும்பும் வகையில் எடையை குறைக்க லாம் என்பதற்கு விடை தருகிறது. ஒவ்வொரு நாளும் உடல் எடையை குறைக்க எவ்வளவு கலோரி செலவழிக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

### Weights &Measures Converter

இது ஒரு கன்வெர்ஷன் கல்குலேட்டர் என்று கூறலாம். உங்கள் எடை, உயரம், உணவு, அளவுகளை நீங்கள் பழைய முறையில் கணக்கு வைத்திருந்தால் இன்றயை மெட்ரிக் அளவில் எவ்வளவு என மாற்றிக்கூறும்.


### Weight Loss Forums

இது ஒரு அமைப்பு இங்கு உடல் எடை குறையவிருப்பம் கொண்டு அதற்கென உழைப்பவர்களைச் சந்திக்கலாம். உங்களுக்கு தேவையான ஆலோசனைகளை பெறலாம்.

உங்களை சில கேள்விகள் கேட்டு நீங்கள் தரும் பதில்களின் அடிப்படையில் உங்களுக்கான டிப்ஸ்கள் கிடைக்கின்றன. மொத்தத்தில் இந்த இணையத்தளம் உடல் நலத்துடன் வாழ நல்ல டிப்ஸ்களை தந்து வழி காட்டுக் கிறது. இந்த தளத்தின் முகவரி ***httpp: www. caloriesperhour.com***

# பணத்தை அள்ளி அள்ளித்தரும் பொலிமர் பொறியியல்

மெட்டீரியல் துறையில் வெகு வேகமாக வளர்ந்து வரும் பிரிவுகளில் ஒன்று பொலிமத் இன்ஜினியரிங்துறையாகும். வேகமாக அதிகரித்து பொலிமரின் உற்பத்திக் கேற்ப இத்துறையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அமெரிக் காவில்லுள்ள கெமிக்கல் இன்ஜினியர்கள் மற்றும் கெமிஸ்டுகளில் 50 சதவீதம் பேர் பொலிமர் துறையில் பணியாற்றுவதாக தகவல்கள் கூறுகின்றன.



பொலிமர்களை உற்பத்தி செய்வது மற்றும் பயன்படுத்துவது ஆகியவற்றில் கெமிக்கல் இன்ஜினியரிங்கின் கோட்பாடுகளையும் விதிகளையும் பொலிமர் இன்ஜினியர்கள் பயன்படுத்துகிறார்கள். இதற்காக பிளான்ட் டிசைன், பிராசஸ் டிசைன், தெர்மோடைனமிக்ஸ், போக் குவரத்து அம்சங்கள் ஆகிய தத்துவங்களை பொலிமர் இன்ஜினியர்கள் ஆராய்கின்றார்கள். பிளாஸ்டிக் மற்றும் பொலிமர் உற்பத்தியை இவர்கள் கண்காணிக்கிறார்கள். உற்பத்தித் தளத்தில் பிளாஸ்டிக் மோல்டர்களையும் டெக்னீஷியன்களையும் கண்காணிப் பவர்களும் இவர்களே.

இத்துறையில் இளநிலை மற்றும் முதுநிலை என இருபிரிவுகளிலுமே பல்வேறு படிப்புகள் உள்ளன. இளநிலையில் பி.இ., பி. டெக், மற்றும் முதுநிலையில் எம். டெக், என்றும் படிப்புகள் உள்ளன. "ஏ" லெவல்வகுப்பில் இயற் பியல், வேதியியல், கணிதம் படித்தவர்கள் பொலிமர் இன்ஜினியரிங் பி.இ., பி.டெக் படிப்பில் சேர லாம். பொலிமர் இன்ஜினியரிங் மற்றும் பிளாஸ் டிக் இன்ஜினியரிங் என இந்தப்படிப்புகள் பெயரிடப் பட்டுள்ளன. இதைப் படித்தவர்கள் பொலிமர் உற்பத்தித் தளங்களிலும் ஆய்வுக் கூடங்களிலும் நேரடியாக பணியாற்றலாம்.

எம். டெக்கில் பொலிமர் இன்ஜினியரிங், பிளாஸ்டிக் டெக்னோலஜி படிப்பதற்கு பொலிமர் இன்ஜினியரிங் அல்லது பிளாஸ்டிக் டெக்னோலஜி அல்லது ஹப்பர் டெக்னோலஜி அல்லது மெக்கானிக்கல் இன்ஜினியரிங்கில் பி.இ. ,பி. டெக், படித்திருக்க வேண்டும். இயற்பியல் அல்லது வேதியியலில் எம். எஸ். சி., படித்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இத்துறையில் படிப்பை முடிப்பவருக்கு பொலிமர் உற்பத்தி மற்றும் உபயோகிக்கும் தொழிற் சாலைகளில் புரடக்ஷன் சூப்பர்வைசர், குவாலிற்றி கொன்ட்ரோல் இன்ஸ்பெக்டர், புரொடக்ஷன் பிளானர். மோல்ட் டிசைனர் என்னும் பல பணிகள் கிடைக்கின்றன. இவர்களுக்கு பொதுத்துறை மற்றும் தனியார் பிளாஸ் டிக் நிறு வணங்களிலும் நல்ல வேலைகள் கிடைக்கின்றன. உற்பத்தித் தொழில் நிறுவனங் களான பிளாஸ்டிக், ஓட்டோமோடிவ். எலெட் ரோனிக்ஸ். ஏரோஸ் பேஸ், பவர் டிரான்ஸ் மிஷன் நிறுவனங் களிலும் நல்ல பணி வாய்ப்புகள் கிடைக் கின்றன.



இயற்கை வளங்கள் குறைவாகிக் கொண்டே வரும் இந்நாட்களில் மாற்று உபயோகப் பொருளான பொலிமரின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு பல்வேறு நாடுக ளில் பொலிமர் மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இத்துறைகளுக்கு வளமான எதிர்காலம் உள்ளது. உலக சந்தையின் போட்டி மற்றும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

**பகுதி A பரீட்சை IX நேரம் -40 நிமிடங்கள்**

### A — Answer

1 $3^2$ இன் பெறுமானம். ________

2 கூட்டுக. $62.36 + 7.83$ ________

3 $10_{இரண்டு}$ என்ற எண்ணில் 1 இன் இடப் பெறுமானம். ________

4 $\sqrt{16}$ இன் பெறுமானம். ________

5 $a = 2b$ , $b = 1$ எனின் a சமன். ________

6 ஒரு கோடாத நாணயம் ஒரு முறை சுண்டப்படும் போது மாதிரிவெளியை எழுதுக. ________

7 $n = 3$ ஆயின் $2n + 3$ இன் பெறுமானம். ________

8 $x = -2$ ஆயின் $x^3$ சமன். ________

9 $A = \{6,9,12\}$ ஆயின் $n(A)$ ________

10 AB,BC எனும் புயங்கள் அமைக்கும் கோணத்தைப் பெயரிடுக. ________

### B — Answer

1 $a^2 + a^2$ சமன் ________

2 கழிக்குக. $62.36 - 7.83$ ________

3 $100_{இரண்டு}$ இல் 1 இன் பெறுமானம் யாது? ________

4 $\sqrt{8}$ ஐ எளிய சேடு வடிவில் எழுதுக. ________

5 $a = 3b^2$, $b = -2$ ஆயின் a இன் பெறுமானம் யாது? ________

6 ஒரு கோடாத நாணயம் ஒரு முறை சுண்டப்படும் போது தலை தோன்றாமல் இருப்பதற்கான நிகழ்தகவு யாது? ________


7 ஒரு கூட்டல் விருத்தியின் $n^{ம்}$ உறுப்பு $2n + 3$ ஆயின் முதல் இரண்டு உறுப்புக்களையும் எழுதுக. ________

8 $x = 3$ , $y = 4$ ஆயின் $x^2 - y$ இன் பெறுமான்ம் யாது? ________

9 தொடைB , தொடைA யில் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை தொடை மொழியில் எழுதுக. ________

10 ஒரு முக்கோணியின் சமனான பக்கங்களுக்கு எதிரான கோணங்கள் சமனாகும்.
ABC எனும் முக்கோணியில் AB = BC ஆயின் சமனான கோணங்களை எழுதுக. ________

### C — Answer

1 


உருவில் குறிக்கப் பட்டுள்ள தரவுகளின் உதவியுடன்
a) OB b) OC இன் நீளங்களை a சார்பில் காண்க.

a)________ b)________

2 பெருக்குக. $34.2 \times 2.3$ ________

3 $101_{இரண்டு} - 11_{இரண்டு} =$ ________

4 $3\sqrt{5} + 2\sqrt{5}$ ஐ சுருக்குக. ________


5 $a = \frac{7b}{5}$ ஆயின் $\frac{5a+b}{5a-b}$ இன் பெறுமானம் யாது? ________

6 ஒரு கோடாத நாணயம் இரு முறை சுண்டப்படும் போது தலை தோன்றுவதற்கான நிகழ்தகவு யாது? ________

7 ஒரு கூட்டல் விருத்தியின் $n^{ம்}$ உறுப்பு $28 - 4n$ ஆயின் அதன் எத்தனையாம் உறுப்பு பூச்சியமாகும். ________

8 $x = 3, y = 4, z = -2$ ஆயின் $2x^2 - y + z$ இன் பெறுமானம் யாது? ________


9 தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தைக் கருத்திற் கொண்டு பின்வரும் தொடைகள் ஒவ்வொன்றையும் அதன் மூலகங்களுடன் எழுதுக.




a) $A \cup B$
b) $A \cap B$

a)________
b)________

10 தரவைப் பயன்படுத்தி x இன் பெறுமானத்தைக் காண்க. ________




### D — Answer

**1** $AB = 2cm, A\hat{B}C = 90^\circ, BC = 1cm$
ஆகவுள்ள முக்கோணி $ABC$ ஐ அமைத்து அதிலிருந்து $\sqrt{5}$ இன் பெறுமானத்தை முதுலாவது தசமதானத்தில் பெறுக. ________

**2** வகுக்க. $10.24 \div 1.6$ ________

**3** $1101_{இரண்டு} + 111_{இரண்டு} - 101_{இரண்டு}$ ஐ சுருக்குக. ________

**4** $\frac{\sqrt{75}}{\sqrt{3}}$ இன் பெறுமானத்தைக் காண்க. ________

**5** சுருக்குக.
$$\frac{2x}{x-1} + \frac{2}{1-x}$$
________

**6** ஒரு கோடாத நாணயம் இரு முறைகள் சுண்டப்பட்டன.
a) மாதிரிவெளியை தொடை வடிவில் எழுதுக.
b) ஒரு முறையும் தலை விழாது இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

a)________
b)________

**7** கூட்டல் விருத்தி ஒன்றின் $n^{வது}$ உறுப்பு $7 - 4n$ ஆகும்.
a) முதல் மூன்று உறுப்புக்களையும் எழுதுக.
b) $10^{வது}$ உறுப்பை எழுதுக.
c) இவ்விருத்தியில் -33 எத்தனையாவது உறுப்பு.

a)________
b)________
c)________


**8**
a) $s = \frac{n}{2}(a + \ell)$ இல் $\ell$ ஐ எழுவாயாக மாற்றுக.
b) $s = 170, n = 17, a = 30$ ஆயின் $\ell$ ஐ காண்க.

a)________
b)________

**9** ENGINEER என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களின் தொடை X எனின்
a) தொடை X ஐ மூலகங்களுடன் எழுதுக.
b) $n(X)$ எவ்வளவு.
c) NIGERIA என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களின் தொடை Y எனின் $X \cap Y$ ஐ எழுதுக.

a)________
b)________
c)________

**10** உருவில் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றின் பெறுமானங்களைக் காண்க.




a) $A\hat{C}B$
b) $C\hat{A}D$
c) $B\hat{A}C$

a)________
b)________
c)________

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

ஜே.மரியநாயகம்

# தமிழ் நாடு அனைத்துக்கட்சித் தீர்மானத்திற்கு

# ம.தி.மு.க. உறுப்பினர்களும் இணக்கம்

## செயலாளர் வை. கோ அறிவிப்பு



(சென்னை)

தமிழ் நாடு அரசாங்கம் கூட்டிய அனைத்து கட்சிக்கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைய தமது நாடாளுமன்ற உறுப்பினர்களும்பதவி விலகுவர் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று புதன்கிழமை அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது. இலங்கையில் ஈழத் தமிழர்களைக் கொன்று ஒழிக்கத் திட்டமிட்டு சிங்கள இன வாத அரசு தொடர்ந்து இனப்படுகொலை நடத்துவதைத் தெரிந்து கொண்ட இந்திய அரசுஆயுத உதவி செய்து வந்து உள்ளது.

எனவேஇது அண்டை நாட்டுக்கு நல்லெண்ண அடிப்படையில் செய்யப்பட்ட உதவி அல்ல. சிங்கள அரசுக்கு இராணுவ பலத்தைக் கூட்டுவதற்காகவே வழங்கப்பட்ட உதவி ஆகும்.

இலங்கையில் ஒருமைப்பாட்டை பாதுகாக்க இந்திய இராணுவம் உதவி செய்கிறது என்று பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் ஒக்டோபர் 2ஆம் திகதி எனக்குஎழுதி, உள்ள கடிதம் ஒரு ஒப்புதல்வாக்கு மூலமாகவே உள்ளது. இலங்கை வான்படைக்குவழங்கிஉள்ள ராடர்களை இந்திய அரசு திரும்பப் பெற வேண்டும். இலங்கைக்கு அனுப்பி உள்ள இந்திய இராணுவப் பிரிவினரைத் திரும்ப அழைக்க வேண்டும்.

குறைந்த வட்டியில்மானிய உதவி போல இலங்கைக்கு வழங்குவதாகச் சொன்ன கடனை இரத்து செய்வதாக இந்திய அரசு அறிவிக்க வேண்டும்.

இந்தியக்கடற்படையும் இலங்கை கடற்படையும் செய்து கொண்ட தகவல் பரிமாற்று ஒப்பந்தத்தை இரத்து செய்யவேண்டும். இலங்கை இராணுவத்துக்கும் வான்படையினருக்கும் இந்தியாவில் அளிக்கின்ற பயிற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இலங்கை அரசு தன்னிச்சை யாவேபோர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்தது.

ஒவ்வொருநாளும் தமிழர் பகுதிகளில் இலங்கை இராணுவம் கொடூரத் தாக்குதல் நடத்தி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருவதால் உடனடியாக தாக்குதலை இலங்கை அரசுநிறுத்தி விட்டு போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

அப்படி அறிவிக்குமாறும் இலங்கை அரசின் நடவடிக்கைகளால் முறிந்து போன அமைதிப் பேச்சுகளை ஏற்கனவே நடு நிலைமையோடு கடமையாற்றிய நோர்வே அரசை நடுவராகக் கொண்டு நடத்த வேண்டும் என்றும் ஐ.நா. மன்றத்தின் அலுவலகத்தை கொழும்பில் திறப்பதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் இந்திய அரசு நிர்ப்பந்திக்கவேண்டும்.

இவற்றையெல்லாம் வற்புறுத்துவதோடு இதைச் செய்வதற்குஇலங்கை அரசு முன்வரா விட்டால் இலங்கையுடனான இராஜ தந்திர உறவுகளை இந்தியாதுண்டித்துக் கொள்ளும் என்றும் பொருளாதார தடைகளை ஏற்படுத்தும் என்று இந்திய அரசு இலங்கைக்கு எச் சரிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம்செய்வதற்கு ஐக்கிய முற்போக் குக்கூட்டணி அரசு முன் வரா விடில் அந்த அரசுக்குத் தரும்ஆதரவை விலக்கிக்கொள்வதாக தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி அறிவிக்கவேண்டும். ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்கிதுரோகம் செய்த இந்திய அரசின் குற்றத்துக்காகமத்திய அமைச்சரவை தான்பொறுப்பு ஏற்க வேண்டும்.

எனவேஇலங்கையில்அரசுபோர் நிறுத்தம் செய்வதற்குஉரியநிர்பந்தத்தை மத்திய அரசு உடனடியாகச் செய்யாவிடில் அமைச்சரவையில் இருந்து தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் உடனடியாக வெளியேற வேண்டும். தமிழர் நலன்காக்கவும் ஈழத்தமிழர் இனக்கொலையைத் தடுக்கவும் சர்வபரித்தியாகத்துக்கும் ஆயத்தமாக உள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு அதன் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத வியைத் துறப்பது ஒருபொருட்டே அல்ல! என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# ஜனாதிபதி உடனடியாக யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும்

## என்கிறார் மங்கள சமர வீர எம்.பி.



(கொழும்பு)

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என்ற மூவினங்களுக்கும் பொதுவான இந் நாட்டை மேலும் மேலும் இரத்தக்களமாக மாற்றிக்கொண்டிருக்காது உடனடியாக யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வினை முன்வைக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமர வீர எம்.பி. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட சர்வதேச ஆதரவினை பெற்றுக்கொள்ளவே சர்வகட்சிக் குழு கூட்டப்படுகின்றது.

உண்மையில் இதன் மூலம் நாட்டில் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகள் எட்டப்படப் போவதில்லை என்றும் அவர் ஊடகங்க ளுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கடந்த 11ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சர்வகட்சிக்குழு கூடியது. இதில் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி என பிரதான எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

ஜே.வி.பியின் நிலைப்பாடு என்னவெனில் 13ஆவது திருத்தச் சட்டம் என்பதும் அதனை அமுல் படுத்துவதற்கான சர்வகட்சிக் குழுவின் யோசனைகள் என்பதும் கண் துடைப்பு நடவடிக்கைகள் என்பதேயாகும்.

மேலும் சர்வகட்சிக்குழு நடவடிக்கைகள் ஒரு மாயை என்றே அந்தக் கட்சி ஆரம்பத்திலிருந்து நிராகரித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் வருகின்றது.

இன்றைய நிலையில் சர்வகட்சிக் குழுவின் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறானதொரு நெருக்கடி மிக்க தருணத்தில் ஜனாதிபதி தலைமையில் கூடிய சர்வகட்சி குழு மாநாட்டில் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சரியான பாதையாக அமையாது என்றும் அரசியல் தீர்வுகளிலேயே தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இராணுவத் தீர்வில் நம்பிக்கை இல்லை என கூறுகின்ற ஜனாதிபதி இதுவரையில் யுத்தப்போக்கை கைவிட்டதாக தெரியவில்லை.

அரசியல் தீர்வு என்ற பெயரில் கூட்டப்படுகின்ற சர்வகட்சிக் குழுவின் நடவடிக்கைகளில் அர்த்தமில்லை என்பது தெளிவு. இலங்கையின் இன்றைய யுத்த நிலைவரம் தொடர்பில் தமிழ் நாட்டில் எழுச்சிப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் உத்வேகம் அடைந் திருக்கின்றன. இதனுடைய வெளிப்பாடு பிரதமர் மன்மோகன் சிங்கின் மத்திய அரசாங்கத்தை இலங்கைப்பிரச்சினையில் தலையிட வைப்பதற்கான அழுத்தத்தை கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் அரசாங்கம் ஓர் உறுதியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டிய கட்டம் ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் தீர்வு என்றும் இராணுவத் தீர்வு என்றும் இரண்டும் கெட்ட நிலையில் சிந்திப்பதைத் தவிர்த்து மூவின மக்களும் இணைந்து வாழ்கின்ற நாட்டை மேலும் மேலும் இரத் தக்களமாக மாற் றாது தேசிய இனப்பிரச் சினைக்குநிரந் தரமான அர சியல் தீர்வே முன் வைக் கப்பட வேண் டும்.

சர்வதேசத்தின் ஆதர வைப்பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத் தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைந்த ஏற்றுக் கொள்ளமுடியாத யோசனைகளை தவிர்த் துக் கொண்டு உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்பதுடன் அரசியல் தீர்வினை முன்வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் இன் னும் கடந்து விடவில்லை என்பதையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு வலி யுறுத்தி நிற்கிறது.

ஏனெனில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கூட்டப்பட்டு வருகின்ற சர்வ கட்சிக்குழுவில் ஆக்கபூர்வமான அல் லது ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானங் கள் எது வும் எட்டப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். (ஓ)

### பணத்தை அள்ளி அள்ளி தரும்...

(10ஆம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைத் தரமேம்பாடு குறித்த தொடர் முயற்சிகளின் காரணமாக பிளாஸ்டிக் மற்றும் பொலிமர் துறையில் முன்னேற்றம் என்பது தவிர்க்க முடியாததாக மாறி வருகிறது.

தொடர் இன்கிரீமென்ட், படிகள், பயன்கள் என பல வகைகளிலும் பொலிமர் இன்ஜினியர்களின் ஊதியம்சிறப்பாக அமைகிறது. தகுதி. திறன்கள் ஆகியவையே இத்துறையில் நல்ல சம்பளம் பெறுவதற்கான தேவைகளாக உள்ளன. பொதுவாக பொதுத் துறையில் பணியாற்றுபவர்களை விட தனியார் துறையில் பணி புரிபவருக்கே நல்ல ஊதியம் கிடைக்கிறது. இத்துறையில் 5 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றும் மூத்த பொலிமர் இன்ஜினியர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு மிக நல்ல ஊதியம் கிடைக்கிறது. பொலிமர் இன்ஜினியரிங் படிப்பானது இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக புதிது புதிதாக பல கல்வி நிறுவனங்களில் தொடங்கப் பட்டு வருகின்றன.

# தற்கொலைக்குண்டுதாரிக்கு அடைக்கலம் கொடுத்தமை தொடர்பில் மூவர் கைது

(கொழும்பு)

அமைச்சர் மைத்திரிபால சிறி சேன மீது இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய குண்டுதாரிக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு தாரி தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்ற வெள்ளவத்தை பெர்னாண்டோ மாவத்தையில் அமைந்துள்ள வீட்டின் உரிமையாளர் அவரது மனைவி மற்றும் மகள் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித் தார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை இலக்கு வைத்து கடந்த வாரம் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட குண்டுதாரி மற்றும் அவரது தாயார் எனக் கூறப்படுகிற பெண் ஒருவர் நோயாளிகள் எனக்கூறப்பட்டு குறித்த வீட்டுக்கு அழைத்துவரப்பட்ட மேலும் இருவ ருமாக நான்கு பேர் அடங்கிய குடும்பம் ஒன்று வெள்ளவத்தை பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள ஆடம்பரவீடு ஒன்றில் தங்கியிருந்த னர்.

பெரும்பான்மை இனத்தவரை உரிமையாளராகக்கொண்ட இந்த வீடு 20 ஆயிரம் ரூபாவுக்கு வாடகைக்குப் பெறப்பட்டுள்ளது.

இவ்வீட்டிற்கு கடந்த மார்ச் மாதத்தில் கொழும்பில் சிகிச்சை பெறுவதற்கென இருவர் வந்துள்ளனர்.

பின்னர் அவ்விருவரும் அங்கிருந்து சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

மேற்படி சம்பவத்திற்கு உறுதுணை புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் தற்போது குண்டுதாரி தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் அவரதுமனைவி மகள் ஆகியோரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். குண்டுதாரியிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முக்கிய தடயமான கைத்தொலைபேசிக்கு பாவிக்கப்படும் சிம் அட்டையை வைத்தே மேலதிக தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. குறித்த வீடும் பொலிஸாரால் முழுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதேவேளை குண்டுதாரியே இயக்கியவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளையும் தோடுதல்களையும் நடத்தி வருகின்றனர். (ஓ)

# உரத்த ஒலியில் இசையை இரசிப்பவர்கள் செவிப்புலனை நிரந்தரமாக இழக்கும் அபாயம்



எம். பி.3 பிளேயர் மற்றும் இறு வட்டுக்களைப் பயன்படுத்தி பாடல்களைக் கேட்டு இரசிப்பவர்களில் பத்தில் ஒருவர் நிரந்தர செவிட்டுத் தன்மையை அடைவதாக ஐரோப்பிய ஒன்றிய ஆய்வொன்று தெரிவிக்கிறது.

மேற்படி உபகணங்களிலிருந்து வெளிப்படும் அதி கூடிய சத்தமே இதற்குக் காரணமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தினசரி ஒரு மணித்தியாலயத்துக்கும் அதிகமாக தொடர்ந்து 5 வருடங்களுக்கு உரத்த ஒலியில் பாடல்களைக் கேட்பவர்கள் நிரந்தர செவிடாகும். நிலைக்கு இலகுவில் தள்ளப்படுவதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட ஐரோப்பா எங்குமுள்ள 10 மில்லியன் பேர் இந்த உரத்த இசையால் செவிடாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி செவிப் புலன் இழக்கும் அபாய நிலையை எவ்வாயு நீக்குவது என்பது தொடர் பில் ஐரோப்பிய ஆணையகம் ஆராய்ந்து வருகிறது. (ஓ)

பூனை கறுப்போ வெள்ளையோ என்பதல்ல,
எலி பிடித்தால் சரி.

– சீனா

வலம்புரி

# தமிழகத்தில் கூடிய சர்வகட்சி மாநாடு

தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. ஈழத்தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வண்ணம் மத்திய அரசை வலியுறுத்தும் வகையில் இந்த மாநாடு அமைந்திருந்தது.

தமிழகத்திலுள்ள சில கட்சிகள் மாநாட்டில் பங்குபற்றவில்லை என்பதற்கப்பால், ஈழத்தமிழர் தொடர்பில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூட்டிய சர்வகட்சி மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததென்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழகத்தில் கூடிய சர்வகட்சி மாநாடு இலங்கை அரசுக்கு எதிரானதல்ல. மாறாக இலங்கை இன விவகாரத்தை சமாதான வழியில் முடிவுக்கு கொண்டுவருமாறு இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் மாநாடாகும்.

எனவே மத்திய அரசு தனது தார்மீகப் பொறுப்பை உணர்ந்து கொள்வதற்கு இந்த மாநாடு உதவும் என நம்பலாம்.

இந்தியாவுக்கு அண்டை நாடாக இருக்கக் கூடிய இலங்கையில் நீண்டகாலமாகப் போர் நடப்பதை இந்தியா பார்த்துக் கொண்டிருப்பது நியாயமற்ற செயலாகும்.

காலத்திற்கு காலம் இலங்கையில் ஆட்சிக்கு வருபவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமல் இழுத்தடித்தனர்.

இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பை இலங்கை நாடு முழுமையாக அனுபவித்து வருகின்றது. இந்துமா சமுத்திரத்தில் தனது வல்லாதிக்கத்தை உச்சப்படுத்த எண்ணும் இந்தியா, இலங்கையில் அமைதியின்மை நீடிப்பதை அனுமதிப்பது எதற்காக?

இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்ற முடிவில் சம்பந்தப்பட்டவர்கள் இலங்கை அரசும், இந்திய மத்திய அரசுமேயாகும்.

இந்திய அமைதிப்படையை வரவழைத்ததன் மூலம் எமது படையினரைப் பாதுகாத்துள்ளேன் என ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறியிருந்தார்.

அதேநேரம் எனது அரசியல் அனுபவமும் ராஜீவ்காந்தியின் வயதும் சமமானவை என்பது ஜே.ஆர்.ஜெயவர்தனவின் வார்த்தையாகும்.

ஆகவே இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியது, அந்தப்படை ஈழத்தமிழர் தொடர்பில் நடந்து கொண்ட முறைமை என்பன தொடர்பிலான குறைகுற்றங்கள் அனைத்தும் இந்திய மத்திய அரசு எடுத்த தீர்மானங்களில் ஏற்பட்ட தவறுகளே அன்றி அதற்கு மேலாக எதுவும் கூறமுடியாது.

எனவே கடந்தகால அரசியல் ரீதியான கசப்புகளை மறந்து இலங்கையில் சகல இனங்களும் சகல உரிமைகளும் பெற்று வாழ்வதற்கான ஏற்பாடுகளை இந்தியா செய்தாகவேண்டும்.

# இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களை பராமரிக்க எழுபது மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

## அமைச்சர் ரிசாத் பதியுதீன்

(கொழும்பு)

வடக்கில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள பொது மக்கள் தங்கியிருக்கும் முகாம்களை பராமரிப்பதற்கான முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு 70 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் தெரிவித்தார்.

நேற்று தமது அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது, விடுவிக்கப்படாத பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வரவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்தபோதும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற முடியாதவாறு புலிகள் பலவந்தமாக தடுத்து வைத்துள்ளனர்.

இதன் காரணமாக இப்போது பொதுமக்கள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி இடம்பெயருகின்றனர். இவ்வாறு இடம்பெயரும் மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள் கூட்டு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் உணவு, குடிநீர், மின்சாரம் மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காகவே 70 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் பற்றாக்குறை ஏற்பட்டால் மேலதிக நிதியை ஒதுக்கவும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (6)

# திகாம்பத்தன கொலை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் வடமேல் மாகாண திகாம்பத்தன பகுதியில் 2006ஆம் ஆண்டு 102படை வீரர்கள் கொல்லப்பட்டும் 100 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதிபதி நிசங்க உதலகமவின் தலைமையில் இந்த விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன.

2006ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி தற்கொலை தாக்குதல் ஒன்றின் போதே இந்த அனர்த்தம் இடம் பெற்றிருந்து.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படும் 16 அதி தீவிர மனிதஉரிமை மீறல் சம்பவங்களில் இது நான்காவது சம்பவமாகும். திருகோணமலையில் ஐந்து தமிழ்மாணவர்கள் கொல்லப்பட்டமை, மூதூரில் 17 தன்னார்வ பணியாளர்கள் கொல்லப்பட்டமை, கெப்பிட்டிக்கொல்லாவையில் 68 பொதுமக்கள் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்களின் விசாரணைகள் ஏற்கனவே இந்த ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டுள்ளன. (இ)

# அடுத்த வருடத்திற்குதேவையான பாடப்புத்தகங்கள் மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன் விநியோகம்

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

(கொழும்பு)

அடுத்த வருடத்தின் பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்துப் பாடப்புத்தகங்களையும் பாடசாலைகளின் மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்பாக விநியோகிப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடத்திற்கான இலவசப் பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் கடந்தமாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயக்கம் டபிள்யூ. எம்.என்.ஜெ.புஸ்பகுமார கூறினார்.

கல்வியமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பாடசாலைகளுக்கு மற்றும் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் நேரடியாக பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பித்தக்கது. ஏனைய சகல மாகாண பாடசாலைகளுக்கும் சம்பந்தப்பட்ட கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக இலவசபாடப்புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வரீரத்தில் சகல தினங்களிலும் பாடப் புத்தகங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு வருவதாகவும் இது தொடர்பாக கல்விப் பணிப்பாளர்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கல்விவெளியீட்டு ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (6)

# இலங்கை பொலிஸ் நிலையங்களில் தொடரும் மனித உரிமை மீறல்கள்

(கொழும்பு)

இலங்கையில் பொலிஸ் நிலையங்களில் தொடர்ச்சி யான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

காலி பொலிஸ் நிலைய சிறைச்சாலையில் கைதியொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அறவித்துள்ளனர்.

20கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபரை பொலிஸார் கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட குறித்த நபர் புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

காலி மலித்தவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் இதுவரையில் வெளியிடப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக பொலிஸ் நிலையங்களில் கைதிகள் உயிரிழக்கும் சம்பவங்கள் வழமையாகி வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக் கின்றனர்.


பொலிஸாருக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றம் சுமத்திய ஒருவர் நீர்கொழும்பில் இனந்தெரியாதோரினால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து ஆசிய மனித உரிமைகள் கண் காணி ப்பகம்கடும் அதிருப்தியை வெளியிட்; டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பகவானின் மனித மேம்பாட்டிற்கான உபதேசம்

சத்தியமும் , தர்மமும் மனிதனுடைய வாழ்வில் மிக முக்கியமாகும். சத்யம் என்றால் எண்ணம், செயல் வாக்கு ஆகிய மூன்றின் இசைவேஆகும். இவை மூன்றும் எங்கு இசைந்துள்ளதோ அங்குசத்யம் நிறைந்து இருக்கும். இன்று மனிதனாக பிறந்தவர்களில்பெரும்பாலானோர் சொல்வதொன்று செய்வதுவேறொன்று. உலகத்தில் மிகவும் மோசமானபாவச் செயல் இதுவாகும். பஞ்சமாபாதங்களில் களவு மிக மோசமான பாவமாகும். இதனைஒருவர் களவு எடுத்தல் பாவமான காரியமாகும் என்று விதப்புரை செய்துகொண்டு அதனை அவரே செய்வது என்பது இறைவனால் மன்னிக்க முடியாத பாவமாகும்.

இன்று உலகிற்கு தேவை அன்பும் சேவையுமாகும் உங்கிளிடம்அன்பு மட்டும்இருந்தால் நாங்கள் எதனையும் அடைந்து விடலாம். அன்பை விட சிறந்த செல்வம் வேறெதுவும் இல்லை. அத்தோடு சேவை என்பது மிகவும் போற்று தலுக்குரியது அனைவரையும் நேசித்து சேவை செய்திடுங்கள். நீங்கள் எந்தப் பணியினை செய்தாலும் அதனை இறைவனுக்கு செய்யும் பணி என்ற உணர்வுடன் செய்யுங்கள். இறைவன் எங்கும் நிறைந்துள்ளார். இறைவன் இங்கு இருக்கிறார்; அங்கு இல்லை என்ற சந்தேகம் கொள்ளாதீர்கள் நாம் செய்யும் சகலதும் இறைவனால் அவதானிக்கப்பட்டே வருகிறது. இறைவன் உங்களுக்கு மேலே கீழே ஏன் உங்களைச் சுற்றியும் இருக்கிறார். நடக்கிற அனைத்தும் இறைவன் தீர்மானப்படியே நடக்கிறது.

சொர்க்கமும், நரகமும் இப்புவியிலேயே கணக்கிடப்படுகிறது. வஞ்சமில்லா நெஞ்சினன், இலட்சுமி தங்கும் முகத்தினன், அவனின் வாக்கு மெய்ஞானத்தின் நாக்கு எனவே இதயம் சுத்தம் வேண்டும் பாத்திரம் நன்றாக இருந்தால் பால் பழுதடையாது போல் இதயம் சுத்தமாக இருந்தால் உள்ளம் ஊறுபட வாய்ப் பில்லை உப்பிட்ட பாத்திரமும், ஊன முள்ள நெஞ்சும் தட்டியழிக்கத் தேவையில்லை. தானே அழியும் வானில் நிலா இருந்தாலும் மேக மூட்டத்தின் மூடலினால் அதனைப் பார்க்கமுடியாதது போல் எங்களுடைய வரம்பு மீறிய ஆசைகளாலும் எண்ணங்களாலும் மூடப்பட்ட உள்ளத்துக்கு இறைவன் தெரிவதில்லை. சற்று நேரத்தில் மேகம் கலைய நிலா எவ்வாறு புலப்படுகின்தோ அதே போல் எமது ஆசைகளும் எண்ணங்களும்நீங்க இறை ஒளி எம்மைத் தழுவும்.



இறைவனை மறந்து விட்டால் நாம் செய்யும்எல்லாம் வீணாகிவிடும். இறைவனையே உயர்ந்த இலக்காக கொள்ளுங்கள். இறைவன் தொலைதூரத்தில் இல்லை.

ஜெய்சாயிராம்

யாதவன்

## குழந்தைகளுக்கான நடமாடும் நூலகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிசு



(ஹொங்காங்)


கோல்ப் வண்டியில் அமர்ந்து புத்தகத்தைக் காட்டுபவர் எச் எஸ்பிசி நிறுவனத்தின் தலைவர் செயல் அதிகாரி சாண்டி பிளக் காரட்.

சீனாவின் சிச்சுவான் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2.4 கோடி மதிப்பிலான நிதியுதவி வழங்கப் போவதாக எச்எஸ்பிசி அறிவித்துள்ளது.

இதற்கு நிதி திரட்டும் வகையில் ஹாங்காங்கில் கோல்ப் விளையாட்டுப் போட்டியை நடத்துகிறது. போட்டி நடைபெறும் இடத்தில் தான் இந்த கோல்ப் கார் நிற்கிறது.

உலகின் நீண்ட கோல்வ் வண்டியான இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. குழந்தைகளுக்கான நடமாடும் நூலகமாக மாற்றப்பட்டுள்ள இதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிசளிக்கப்படவுள்ளது. ஓ

## எஜமானியின் வேதனையை தீர்க்க குதிரைக்குட்டிக்கு செயற்கை கண்



(லாட்டன்)

அமெரிக்காவின் ஆக்லஹாமா நகரின் லாட்டன் என்ற இடத்தைச் சேர்ந்த குட்டிக் குதிரை இது. கடந்த ஜுன் 1ஆம் திகதி பிறந்த அதற்கு சில நாட்களில் ஒரு கண் பார்வை பறிபோய் அகற்ற வேண்டியதாகி விட்டது.

குட்டிக் குதிரையின் கண் இல்லாத தோற்றத்தைப் பார்க்க அதன் எஜமான சிறுமி கெல்சே சம்ப்லேவால் முடியவில்லை. அவளது வேதனையைப் போக்கும் வகையில் குதிரைக்கு அசல் கண் போலவே தோன்றச் செய்யக்கூடிய செயற்கைக் கண் பொருத்தப்பட்டது. ஓ

# இந்தியா - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்போல் சீனா- பாகிஸ்தான் அணு ஒப்பந்தம் உருவாகும்

(இஸ்லாமாபாத்)

இந்திய- அமெரிக்கா இடையே அணு சக்தி ஒப்பந்தம் ஏற்பட்டது போலபாகிஸ்தான்- சீனா இடையேயும் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. இது தொடர்பாக சீனாவுக்கானபாகிஸ்தான் தூதர் மசூத்கான் கூறியதாவது,

சிவில் அணுசக்தியை அமைதி வழிக்குப் பயன்படுத்துவதில்பாகிஸ்தானும் சீனாவும் எப்போதும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

அதனால் இரு நாடுகள் இடையேயான அணு சக்தி ஒப்பந்தம், பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரியின் தற்போதைய சீன பயணத்தின் போது 'கையெழுத்தாகும். தொழில் நுட்பம், விவசாயம்,தாதுவளங்கள் என பல துறைகளில் இரு நாடுகள் இடையே ஏற்கனவே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் முதலீடுகளை அதிகரிக்கும் வகையில், அது தொடர்பான விதி முறைகளிலும் இருநாடுகளின் தலைவர்களும் கையெழுத்திடுவர். சர்தாரியின் பயணத்திட்டத்தில் முக்கிய அம்சமாக அணுசக்தி ஒப்பந்தம் இடம் பெற்றுள்ளது. அதில் மாற்றம் இல்லை.

பாகிஸ்தானில் புதிய அணு உலைகள் அமைக்க சீனாவின் உதவி அவசியம் அதற்காகவே ஒப்பந்தம் போடப்படவுள்ளது.

இது தொடர்பான எங்களின் விருப்பத்தை சீன அரசிடம் தெரிவித்துவிட்டோம். அவர்கள் எங்களை அதிருப்தி அடைய வைக்க மாட்டார்கள். இவ்வாறு மசூத்கான் கூறினார்.

அமெரிக்காவுடன் இந்தியா அணு சக்தி ஒப்பந்தத்தை செய்து கொண்டதால் அதே போன்ற ஒப்பந்தத்தை பாகிஸ்தானும் போடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அந்நாட்டில் அதிகரித்து வருகிறது. அதனால்த்தான் சீனாவுடன் அணு சக்தி ஒப்பந்தம் போடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் அணு துறை வளர்ச்சியில் சீனாவின் ஆதரவும் அரவணைப்பும் உண்டு.


இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அணு சக்தி ஒப்பந்தத்தால் ஏற்பட்ட நெருக்கத்தை சீனாவும் முழு மனதுடன் அங்கீகரிக்கவில்லை. இப்பகுதியில் பாகிஸ்தானுடன் நெருக்கம் கொண்டிருக்க சீனா மிகவும் விரும்புகிறது. அது அந்த நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சம். ஓ

# புஷ்ஷின் பொருளாதார அணுகுமுறை தோல்வி

*பேராசிரியர் கிரக்மென் தெரிவிப்பு*

நலிவடைந்த வங்கிகளுக்கு என்னதான் நிதியுதவி அளித்தாலும் சர்வதேச அளவில் நிதிச்சந்தைகளில் ஏற்பட்டுள்ள மந்த நிலை தொடரவே வாய்ப்புள்ளது என பொருளாதாரத்திற்கு நோபல் பரிசு பெற்ற போல் கிரக்மன் கூறினார்.

இந்த ஆண்டின் பொருளாதார நோபல் பரிசு பெற்றிருப்பவர் போல் கிரக்மன் இவர் அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழக பேராசிரியர் நியூயோர்க் ரைம்ஸ் இதழில் பொருளாதார கட்டுரைகளை எழுதி வருகிறார். அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரக் கொள்கைக்களை கடுமையாக விமாசசித்துள்ளார். தற்போது சர்வதேச அளவில் ஏற்பட்டு வரும் பொருளாதார மந்த நிலை இன்னும் மோசமான, நிலைக்குச் செல்லும் என்பது இவரது வாதம். இவர் செய்தி நிறுவனம் ஒன் றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது சர்வ தேச அளவில் பொருளாதாரத்தில் மந்தமான சூழ்நிலை ஏற்படும் என்பது ஏற்கனவே எதிர் பார்த்த ஒன்றுதான்.நலிவடைந்த வங்கி களை தூக்கி நிறுத்த பிரிட்டன் அரசு அறிவித்துள்ள நிதி உதவியால் ஒன்றும் ஆகப் போவதில்லை. இந்த மந்த நிலை நீண்ட நாட்களுக்குத் தொடரும் தொழில் துறை தேக்கம்தொடரும்.



முன் நான் மட்டும் அமெரிக்க அதிபர் புஷ் மேற்கொள்ளும் பொருளாதாரக் கொள்கையை குறை கூறுபவனாக கருதப் பட் டேன். இப்போது அமெரிக்க மக்கள் பலரும் அவர் பின்பற்றிய கொள்கை தவறு என்று கருத்துக் கணிப்பில் கூறியுள்ளனர்.

இவ்வாறு போல் கிரக்மன் கூறினார். ஓ

# அவுஸ்திரேலியாவில் சிற்ப அணிவகுப்பு



(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள தமரமா கடற்கரையில் 2008ஆம் ஆண்டுக்கான சிற்ப கண்காட்சி தொடங்கி உள்ளது. மூன்று வாரங்களுக்கு நடை பெறும இக்கண் காட்சியில் 7நாடுகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விலங்குகளின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

வெவ்வேறு விலங்குகள் வரிசையாக அணிவகுத்துச் செல்வதைப் போன்ற தோற்றத்தில் இடம்பெற்றுள்ள சிற்பங்களை பார்வையிடுகிறார் ஒருபார்வையாளர். ஓ

# சவுதி அரேபிய நகரான ஜிடாவில் உலகின் அதி உயரமான கட்டடம்

உலகின் அதி உயரமான கட்டடத்தை சவூதி அரேபிய நகரான ஜெடாவில் அமைக்கப் போவதாக அந்நாட்டு இளவரசர் அல்வலீட் பின் தலால் தெரிவித்தார்.

தனது "கிங்கம் ஹோல்டிங்" கம்பனியானது, ஒரு கிலோ மீற்றரிலும் (3, 281 அடி) அதிகமான உயரமுடைய கட்டட மொன்றை நிர் மானிக்கவுள்ளதாக இளவரசர் கூறினார்.

ஆடம்பர வீடுகள், ஹோட்டல்கள் மற்றும் அலுவலகங்களைக் கொண்டமையவுள்ள இக் கட்டிடத்திற்கான நிர்மாண செலவு , 26.7 பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஓ

# அரச இரகசியங்களை அம்பலப்படுத்திய பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்

அரசாங்க ஊழல் தொடர்பில் அம் பலப்படுத்திய இரு வியட்நாமிய ஊடகவியலாளர்கள் நீதிமன்றி விசாரணைகளுக்கு உட்பட்டுள்ளனர்.

அந்நாட்டு பிரபல துயோய் திறி மற்றும் தானஹ்நியன் பத்திரிகைகளைச் சேர்ந்த நகுயென் வான்ஹெய் (33வயது) நகுயன் வியட்சியன் (56 வயது) ஆகிய இந்த ஊடகவியலாளர்கள் மீது சுதந்திரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் துஷ்பிரயோ கம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் உணர்வைத் தூண்டக்கூடிய அரசாங்க இரகசிய தகவல்களை ஊடக நிறுவனங்களுக்கு வழங்கிய குற்றச்சாட்டில் இரு உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகளும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஓ

# அவுஸ்திரேலியாவில் முதலையின் வயிற்றிலிருந்து மனித எச்சங்கள் மீட்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் பின்தங்கிய பிரதேசமொன்றில் பிடிக்கப்பட்ட முதலையின் வயிற்றிலிருந்து மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 30ஆம் திகதி ஆதர்புக்கர் என்ற மீனவர் காணாமல் போன இடத்திலிருந்தே 15 அடி நீளமான மேற்படி இராட்சத முதலை பிடிக்கப்பட்டுள்ளதாக குயீன்ஸ் லாண்ட் மாநில பொலிஸார் தெரிவித் தனர்.

இந் நிலையில் முதலையின் வயிற்றிலிருந்த மனித எச்சங்கள் மேற்படி மீனவருடையதா என்பதை கண்டறிய மரபணு பரிசோதனை அவசியமாக உள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கொட்லாந்தை பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் வியட்நாம் போர் படை வீரரான ஆர்தர் புக்கர் காணாமல் போன இடத்தில் அவரால் கைவிடப்பட்டிருந்த புகைப் படக்கருவி



மற்றும் ஏனைய பொருட்களுக்கு அருகில் முதலையொன்று நகர்ந்து சென்றமைக்கான அடையாளங்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஓ

# உலக தரிசனம்

## உலக அழகி நடிகை ஐஸ்வர்யாராய் வருமானவரி வழக்கில் சிக்கியுள்ளார்

(மும்பை)

நடிகை ஐஸ்வர்யா ராய் தாக்கல் செய்த 1996-97ஆம் ஆண்டுக்கான வருமான வரி கணக்கில் அவர் சலுகை பெற்றதை எதிர்த்து மும்பை உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உலக அழகிப் பட்டம் பெற்ற நடிகை ஐஸ்வர்யா ராய் கடந்த 1996-97 ஆம் ஆண்டுக்கு தாக்கல் செய்திருந்த வருமான வரி கணக்கில் வரி கணக்கிடுவதற்கான ஆண்டு வருமானம் 2.14 இலட்சம் ரூபாய் என குறிப்பிட்டிருந்தார். மேலும் அந்த ஆண்டில் தான் அவர் உலக அழகிப் பட்டம் பெற்றார். அதன் மூலம் அதிக பரிசுத் தொகை கிடைத்தது. உலக அழகிப் பட்டம் பெற்றதன் மூலம் உலக நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

186நாட்களுக்கு மேல் வெளிநாடுகளில் இருந்ததால் வெளிநாட்டு வாழ் இந்தியர் என்ற பிரிவில் சலுகை பெற்றார். கடந்த 2003ஆம் ஆண்டு வருமான வரித்துறை அதிகாரிகள் ஐஸ்வர்யாராயின் வருமான வரி கணக்கை மீண்டும் ஆய்வு செய்தனர்.

இது குறித்து வருமானவரித்துறை சார்பில் ஆஜரான பென்னி சட்டர்ஜி கூறுகையில்,

அவரது பாஸ்போட்டை ஆய்வு செய்த



போது அவர் 186 நாட்களுக்கு குறைவாகத் தான் அந்தக் காலகட்டத்தில் வெளிநாட்டில் இருந்துள்ளார்.

எனவே அவர் உலக அழகிப் பட்டம் பெற்றதற்குப் பின் வெளிநாடுகளில் சம்பாதித்த 26 லட்ச ரூபாவிற்கு வருமான வரியை வட்டியுடன் செலுத்த உத்தரவிடவேண்டும் என்றார். ஓ

# லாராவின் சாதனையை முறியடிக்க டெண்டுல்கருக்கு தேவை 15 ஓட்டங்கள்

## இறுதியாக 8இன்னிங்ஸில் 157 ஓட்டங்களையே சேர்த்துள்ளார்

(பெங்களூர்)

உலகின்தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில்ஒருவர் சச்சின் டெண்டுல்கர். பல்வேறு சாதனைகளுக்கு அவர் சொந்தக்காரர் .ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் (16,361 ஓட்டங்கள்) அதிக சதம் (42) டெஸ்டில் அதிக சதம் (39)இப்படி பல உலக சாதனைகளை படைத்திருக்கிறார்.

டெண்டுல்கர் தனது சாதனையில் மேலும் ஒருமைல் கல்லை நோக்கி சென்று கொண்டு இருக்கிறார். அது தான் லாராவின் சாதனை.லாரா டெஸ்டில் அதிக ஓட்டங்கள் (11,953) எடுத்துள்ளார்.

இந்த சாதனையை டெண்டுல்கர் முறியடிப்பதற்கான காலம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்திய அணி கடந்த ஜூலை மாதம் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்டில் விளையாடி இந்த தொடருக்கு முன்பு லாராவின் சாதனையை முறியடிக்க டெண்டுல்கருக்கு 172 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

3டெஸ்ட்(6இன்னிங்ஸ்)இருப்பதால் இலங்கை மைதானத்தில் லாராவின் சாதனையை அவர்எளிதில் முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு ஏற்றவாறு ஊடகங்களும் அவருக்கு முன்னுரிமை கொடுத்தது.


ஆனால் மெண்டீஸ், முரளிதரன் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் டெண்டுல்கர் ஏமாற்றத்தை கொடுத்தார். அவர்முதல் டெஸ்டில் 39 ஓட்டங்களையும் 2ஆவது டெஸ்டில் 36ஓட்டங்களையும் கடைசி டெஸ்டில் 20 ஓட்டங்களையும் எடுத்தார்.

3 டெஸ்டில் அதாவது 6 இன்னிங்சில் மொத்தம் 95 ஓட்டங்களையே எடுத்தார். சராசரி 15.83 ஆகும்.

இலங்கையில் சாதனையை முறியடிக்காத அவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டிலாவது முறியடிப்பார் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது.அப்போது அவருக்கு 77 ஓட்டங்கள் தேவைப்பட்டது போட்டிஆரம்பமாகும் முன்பு லாரா கூட தனது சாதனையை முறியடிக்க டெண்டுல்கருக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார்.

ஆனால் பெங்களூர் டெஸ்டில் 77ஓட்டங்கள் எடுக்க முடியாமல் சொதப்பிவிட்டார். மேலும் டெஸ்டுக்காககாத்திருக்கவேண்டிய பரிதாப நிலையில் அவர்உள்ளார். பெங்களூர் டெஸ்டில் முதல் இன்னிங்சில் 13 ஓட்டங்களையும் 2ஆவது இன்னிங்சில் 49ஓட்டங்களையும் எடுத்தார். ஆக மொத்தம் 62 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

லாராவின் சாதனையை முறியடிக்க டெண்டுல்கருக்கு தற்போது 15ஓட்டங்கள் தேவை. மொகாலியில் நாளை ஆரம்பமாகும் 2ஆவது டெஸ்டில் அவர் இந்தசாதனையை முறியடிக்கலாம்



டெண்டுல்கர் கடைசியாக விளையாடிய 8டெஸ்ட் இன்னிங்சில் சேர்த்த மொத்தம் 157 ஓட்டங்களே எடுத்துள்ளார். இதில் ஒரு அரை சதம் கூட இல்லை. அவர் சிறப்பாக விளையாடி 10 மாதம் ஆகிறது. அவுஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் டெஸ்டில் கடந்த ஜனவரி மாதம் 153 ஓட்டங்களை குவித்தார். அதன்பின்னர் அவர் 5டெஸ்ட் ஆடிவிட்டார்.

நேற்று முன்தினம் லாராவின் சாதனையை டெண்டுல்கர் முறியடிக்காவிட்டாலும் அணியை தோல்வியில் இருந்து காப்பாற்றியவர்களில் ஒருவராக திகழ்ந்தார்.

எனினும் அணியின் நலனுக்காக இல்லாமல் சாதனைக்காக ஆடும் வீரர் என்று குற்றச்சாட்டு அவர் மீது இன்னும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடர் 2009 செப்.24 ஆரம்பம்

## ஐ.சி.சி அறிவிப்பு

(டுபாய்)

ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடர் 2009 ஆண்டு செப்ரெம்பர் 24ஆம் திகதி முதல் ஒக்டோபர் 5ஆம் திகதிவரை பாகிஸ்தானில் நடைபெறும் என ஐ.சி.சி அறிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடர் அந்நாட்டில் காணப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களால் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து உட்பட்ட நாடுகள் வர மறுத்தமையால் 2009 ஆம் ஆண்டு வரை ஒத்தி வைப்பதாக ஐ.சி.சி அறிவித்தது.

இந்நிலையில் நேற்று ஐ.சி.சியின் இரண்டாம் நாள் மாநாட்டில் இப்புதிய கால அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# டெஸ்ட் தர வரிசையில் சச்சின் பின்னடைவு

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) டெஸ்ட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் தர வரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

டெஸ்ட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த லாராவை முந்தவுள்ள டெண்டுல்கருக்கு துடுப்பாட்ட வரிசையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 23 ஆவது இடத்தில் இருந்து அவர் 24 ஆவது இடத்துக்கு பின் தங்கியுள்ளார்.

இதேபோல் 10ஆவது இடத்தில் இருந்த சேவாக் 11ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார்.

டிராவிட், லக்ஸ்மன் முன்னேற்றம் அடைந்துள்ளனர். 15ஆவது இடத்தில் இருந்த லக்ஸ்மன் 14ஆவது இடத்துக்கும், 20 ஆவது இடத்தில் இருந்த டிராவிட் 18ஆவது இடத்துக்கும் முன்னேறி உள்ளனர்.

அவுஸ்திரேலிய வீரர் மைக்கெல் ஹசி முதல் இடத்திலும், சந்தர்போல் (மேற்கிந்திய தீவுகள்) 2ஆவது இடத்திலும், சங்கக்கார்ரா (இலங்கை) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சிறப்பாக பந்து வீசியதால் சகீர்கான் 7 இடங்கள் முன்னேறி 11ஆவது இடத்தை பிடித்துள்ளார். கும்பிளே 18ஆவது இடத்துக்கும் பின் தங்கியுள்ளார்.

முரளிதரன் (இலங்கை) முதல்இடத்திலும் ஸ்ருவெட் கிளார்க் (அவுஸ்திரேலியா) இரண்டாவது இடத்திலும், ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா) மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (5)

# தொடரை வென்றது நியூசிலாந்து



(சிட்டஹொங்)

ரெய்லரின் சிறப்பான சதத்தின் மூலம் நியூசிலாந்து அணி மூன்றாவது ஒருநாள் போட்டியில் 79ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

விக்டோரி தலைமையிலான நியூசிலாந்து கிரிக்கெற் அணி பங்களாதேஷிற்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரண்டு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் தொடரில் முதல் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியும் 2 ஆவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணியும் வெற்றி பெற்றிருந்தன.

இந்நிலையில் 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி சிட்டஹொங்கில் நேற்று முன்தினம் நடந்தது.

டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளில் ஸிம்பாப்வே தவிர்த்து முதல் முறையாக பெரிய அணிக்கு எதிராக தொடரை வெல்லும் நம்பிக்கையுடன் பங்களாதேஷ் அணி களம் இறங்கியது. சொந்த மண்ணில் அந்த அணியின் 100ஆவது ஒருநாள் போட்டி இதுவாகும்.

நாணயச் சுழற்சியியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெற்றுக்கள் இழப்புக்கு 249 ஓட்டங்கள் சேர்த்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் 13 ஓட்டங்களுக்குள் வெளியேறினாலும், ரோஸ் ரெய்லர், ஜேமி ஹவ், இணைந்து நியூசிலாந்து அணியைத் தூக்கி நிறுத்தினார்கள். தனது 3ஆவது சதத்தை பூர்த்தி செய்த ரெய்லர் 119 பந்து, 5 பவுண்டரி, 4 சிக்சர் உட்பட103 ஓட்டங்களும் , ஹவ் 73 ஓட்டங்களும் குவித்தனர்.

அடுத்து ஆடிய பங்களாதேஷ் அணி ஒரு கட்டத்தில் 11.5 ஓவர்களில் ஒரு விக்கெற்றுக்கு 49 ஓட்டங்கள் என்று ஓரளவு நல்ல நிலையில் இருந்தது.

ஆனால் அடுத்து 28 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் 5 விக்கெற்றுக்களை பறி கொடுத்தது.

இதன் பின்னர் சரிவில் இருந்து அணியால் மீள முடியவில்லை.

50 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 8 விக்கெற்றுக்கள் இழப்புக்கு 170 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

இதனால் 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. பங்களாதேஷ் அணியில் அதிகபட்சமாக நயீம் இஸ்லாம் 46 ஓட்டங்களும், தமிம் இக்பால் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் - நியூசிலாந்து இடையே 2 டெஸ்ட் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி நாளை சிட்டஹொங்கில் ஆரம்பமாகிறது. (5)

# வேண்டுமென்றே நேரத்தை கடத்தி வெற்றியை கங்குலி பறித்துவிட்டார்

## ஆஸி.ஊடகம் குற்றச்சாட்டு

(மெல்போர்ன்)


"பெங்களூர் டெஸ்ட் சமநிலை யாவதற்கு இந்திய வீரர் சௌரவ் கங்குலி தான் காரணம். வேண்டுமென்றே நேரத்தை கடத்தி அவுஸ்திரேலியாவின் வெற்றி வாய்ப்பை பறித்து விட்டார்'' என அவுஸ்திரேலிய ஊடகம் குற்றம்சாட்டியுள்ளது. இந்தியா சுற்றுப்பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் பெங்களூரில் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமநிலையாக முடிந்தது. இப்போட்டி சமநிலையாக முடிந்ததற்கு இந்திய வீரர் சௌரவ் கங்குலி தான் காரணம் என அவுஸ்திரேலியாவின் நஷனல் நைன் நியூஸ் செய்தி நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

### சவாலான இலக்கு

இப்போட்டியை பொறுத்தவரை, கடைசி நாள் ஆட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்சை விரைவாக முடித்தது. இதன் மூலம் இந்திய அணிக்கு 229 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது. ஒரு நாளில் இந்த இலக்கை எட்டுவது மிகவும் கடினம். அதற்குள் விக்கெற்றுக்களை கைப்பற்றி வெற்றிபெற்று விடலாம் என்பது தான் அவுஸ்திரேலியாவின் கணிப்பு. ஆனால் சச்சின், லக்ஷ்மன் பொறுப்புடன் ஆடி விக்கெற் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தினர். அதற்குப் பின் வந்த கங்குலியும் தனது பங்குக்கு பொறுப்புடன் ஆடி போட்டி சமநிலையாக வழிவகுத்தார். தவிர, இந்திய அணிக்கு சாதகமாக போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இரண்டு முறை தடைப்பட்டது. இதன் காரணமாகவே போட்டி சற்று முன்னதாகவே முடிக்கப்பட்டது. இவை எல்லாமே இந்திய அணிக்கு சாதகமாக அமைய போட்டி சமநிலையானது.

### குற்றச்சாட்டு

இப்போட்டி குறித்து அவுஸ்திரேலியாவில் இயங்கிவரும் "நஷனல் நைன் நியூஸ்'' நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், பெங்களூர் டெஸ்ட் சமநிலையில் முடிய இந்திய வீரர் சௌரவ் கங்குலி தான் காரணம். வேண்டுமென்றே போட்டியை சீர்குலைத்து விட்டார். முதலாவதாக போதிய வெளிச்சமின்மை என நடுவர்களிடம் கூறி அவர்களை இணங்க வைத்தார். மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகிய போது சக வீரர் லக்ஷ்மன் மைதானத்துக்கு விரைவில் வர தொடைப் பகுதியில் பாதுகாப்புக்காக வைக்கப்படும்



கவசத்தை மறந்து வைத்து விட்டு மீண்டும் எடுக்கச் சென்றார். இதன்மூலம் சிறிது நேரத்தை செலவழித்தார். இவற்றை எல்லாம் உள்நோக்கத்துடன் செய்து அவுஸ்திரேலியாவின் வெற்றி வாய்ப்பை பறித்து விட்டார். தவிர நடுவர்களும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சூழ்ச்சி செய்துவிட்டனர். ஆட்டத்தை மாற்றக்கூடிய முக்கியமான தருணங்களை தடை செய்துவிட்டனர். இரண்டு முறை வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தடைப்பட்ட போதும், சூரியன் பிரகாசமாகவே இருந்தது என அவ்வூடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (5)

# 51 ஆவது படைப்பிரிவினரால் வீடுகள் கையளிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)


இலங்கை இராணுவத்திற்கு கடந்த 10ஆம் திகதி 59 வருடங்கள் பூர்த்தியானதையிட்டு யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியின் ஆலோசனையின் பேரில் யாழ். பிரதேசத்தில் பல நலன்புரி நடவடிக்கைகளை 51-வது படையணி தலைமையகம் மேற்கொண்டது.

யாழ்.பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் 511, 512, 513 ஆகிய படைப் பிரிவுகள் மற்றும் யாழ்.நகர பாதுகாப்புப் படைப் பிரிவு ஆகியவற்றில் கடமை புரியும் இராணுவ வீரர்களினதும் பிரதேச மக்களினதும் ஒத்துழைப்புடன் கூடியமுயற்சியால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மற்றும் வலுவிழந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு 10 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

மேலும் கடந்த மே மாதம் பூநகரி பிரதேசத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் முற்றாக சேதமடைந்த, அப்பகுதியில் வாழ்ந்த மிகவும் வறிய குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு புதிய வீடொன்றும் வழங்கப்பட்டது.

மேலும் இராணுவத்திற்கு 59 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு யாழ்.ஆதார வைத்தியசாலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டதுடன் யாழ்.ஜோசம் முதியோர் இல்லத்திற்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

அத்துடன் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், அரியாலை விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஏ)



இராணுவத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் சில (படங்கள்: பாதுகாப்பு படையினர்)

## மொழியியல் ஆங்கிலக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கில துறையினரால் மொழியியல் ஆங்கிலகண்காட்சி 'Lingua-2008' எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளது. இதில் மொழியியல் சம்பந்தமான காட்சிப் பொருட்களும், ஆங்கிலமொழி இலக்கியத்தைப் பற்றிய காட்சிப் பொருட்களும் பார்வைக்கு வைக்கப்படும்.

பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் மொழியியல், ஆங்கிலம் கற்பவர்களும் மொழியியல், ஆங்கிலமொழி இலக்கியம் என்பவற்றில் ஆர்வம் உள்ளவர்களும் இதை பார்த்து பயன் பெறலாமென யாழ். பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத் துறையினர் தெரிவிக்கின்றனர். (ஏ)

## தமிழக சட்டத்தரணிகளும் பணிப் புறக்கணிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து இரண்டு நாட்கள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் சென்னைச் சட்டத்தரணிகள் ஈடுபடுகின்றனர்.

சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்க பொதுக் குழுக்கூட்டம் அதன் தலைவர் பால்கனகராஜ் தலைமையில் நடந்தது.

சங்கத்தின் செயலர் வேல்முருகன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழக மீனவர்களை படுகொலை செய்ததோடு அவர்களின் உடைமைக்கும், மீன்பிடித் தொழிலுக்கும் இலங்கை அரசு பங்கம் விளைவிக்கிறது.

இலங்கை அரசுக்கு பண உதவி, ஆயுத உதவி, தொழில்நுட்ப உதவி செய்வதை இந்திய அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ச-5)

## அனர்த்தத்...

நிலைமையைச் சமாளித்த விமானி சாதுரியமாக விமானத்தை செலுத்தி பாரிய விபத்தை தவிர்த்துக் கொண்டார் என சிறிலங்கன் எயார் லைன்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக பெய்துவரும் கடுமையான மழை காரணமாக விமானிக்கு சரியாக ஓடு பாதை தெரியாமல் போனதே இதற்கு கார ணம் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின் விளக்குகளுக்கு மேலால் விமானம் ஓடத் தொடங்கியதும் அதனால் உடைந்த கண்ணாடிகளே விமானத்தின் ரயரை சேதப் படுத்தியிருக்கக் கூடுமெனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ச-5)

## புதுக்குடியி...

தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் அதிக எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்களும் கனரக வாகனங்களும் காணப்பட்டுள்ளன.

இத்தாக்குதலில் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் விமானப்படைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். அதன்பின்னர் முற்பகல் 11.30 மணியளவில் இரண்டாவது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். (ச-5)

## இராஜினாமாக்...

கனிமொழி இராஜினாமாக் கடிதத்தை கையளித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்றுவரும் மோதல் களை இரண்டு வாரத்துக்குள் நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிவிலகுவார்கள் என தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி எதிர்வரும் ஒக்டோபர் 29ஆம் திகதி பின்திகதியிடப்பட்ட இராஜினாமாக் கடிதத்தை தமிழக முதல்வரிடம் நேற்று கையளித்தார்.

இதனை தொடர்ந்து ஏனைய தமிழக நாடளு மன்ற உறுப்பினர்களும் தமது இராஜினாமாக் கடிதங்களைக் கையளிப்பார்கள் என தமிழகச் செய்திகள் கூறுகின்றன. (ச-5)

## வடக்கில் பல ...

உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் 44 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் மோதல்கள் காரணமாக விடுதலைப் புலிகளுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆயினும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின் போது 60 இராணுவ வீரர்கள் வரையில் படுகாயமடைந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, அக்கராயன் மற்றும் முறிகண்டி ஆகிய பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் மாலை 4 மணிவரையில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

சுமார் ஆறு மணித்தியாலங்கள் வரையில் நீடித்த இந்த மோதல்களின் போதே 60 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் வன்னித் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

## வன்னிக்கு 18 லொறி...

தலையடுத்து எனது அமைச்சு அந்த மக் களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் 51 லொறிகளில் 650 மெற்றிக்தொன் உணவு பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த வாரம் அரசாங்கத்தினால் விலை கொடுத்து வாங்கப்பட்ட சீனி, அரிசி, மற்றும் தேங்காய் எண்ணெய் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் 20 லொறிகளில் அனுப்பப்பட்டன.

புளியங்குளம் பகுதியில் பாலம் ஒன்று உடைந்ததனால் வீதியில் ஒருநாள் தடையேற்பட்டது. எனினும் அந்தப்பகுதிக்கு விரைந்த வீதித்திருத்த பணியாளர்கள் மேற்கொண்ட திருத்த வேலைகளையடுத்து, பாதை சீர் செய்யப்பட்டு, 20 லொறிகளும் அவ்விடத் திலிருந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்றடைந்தன.

நாளை வெள்ளிக்கிழமை மேலும் 50 லொறிகளில் 750 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். (ச)

## ஒரு வார...

மருந்துப் பொருட்களை ஏற்றிய மூன்று லொறிகள் ஓமந்தை சோதனைச் சாவடியின் ஊடாக இன்னும் வன்னிக்கு வந்து சேரவில்லை.

அத்துடன், வவுனியாவுக்கு நோயாளிகளை அம்புலன்ஸ் வாகனங்களில் அனுப்புவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 நாள் குழந்தை ஒன்றுக்கு ஏற்பட்ட நோயை அடுத்து அதனை வவுனியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தபோதும் அது தோல்வியடைந்த நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது.

இடம் பெயர்ந்துள்ள கிளிநொச்சி வைத்தியசாலையில் 300 நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவுக்கு சுமார் 800 தொடக்கம் 1200 பேர் வரை வந்து செல்கின்றனர். நோயாளிகள் தங்கி சிகிச்சைபெற போதிய வசதியின்மையால், வைத்தியசாலையின் தரைகளிலும் நடைபாதைகளிலும் தங்கியுள்ளனர்.

புளியம்பொக்கணை, விஸ்வமடு மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

குடிநீருக்குப் பாரிய தட்டப்பாடு நிலை ஏற் பட்டுள்ளது. இடம்பெயர்ந்தோரில் 95 வீதமானோருக்கு உரிய கழிப்பறை வசதிகள் இல்லை என தன்னார்வு நிறுவனத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## உரும்பிராயி...

இளைஞன் கடந்த 10 வருடங்க ளாக தென்பகுதி சிறைச்சாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்து கடந்த மாதமே விடுதலையானவர் என்றும் இருபது நாட்க ளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார் என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ். மாவட்ட நீதிவான் இ.வசந்தசேனன் மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-5,49)

## தமிழர் தேசத்துக்கு...

ஏதிலிகளாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் மீது வானூர்தி குண்டு வீச்சுக்களையும் ஷெல் வீச்சுக்களையும் சிங்கள அரச படைகள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். கண்மூடித்தனமான இந்தத் தாக்குதல்களினால் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வருகின்றனர்.

இவர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பது மிகவும் அரிதாகும். நாகரிக உலகில் கொடுமையானதொரு இன அழிப்புப் போரை ஈழத்தமிழ் மக்கள் எதிர் கொண்டு வருகின்றனர்.

### கருணாவின் நியமனம்

கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து எப்போது விலக்கப்பட்டாரோ அன்றிலிருந்தே தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டுள்ளார். கடுமையான இன அழிப்புப் போரை மேற்கொண்டுவரும் சிங்கள அரசு வெளிநாடுகளை ஏமாற்றி இராணுவ உதவிகளைப் பெறுவதற்காக கருணா போன்றவர்களை கருவியாக பயன்படுத்தி வருகின்றது.

இவ்வாறானவர்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக அரசினால் நியமிக்கப்பட்டாலும் மக்கள் அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அரசானது கடந்த 30 வருடங்களாகவே தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போரை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் இப்போது கருணாவையும் அரசு பயன்படுத்தி வருகின்றது.

அண்மைக்காலமாக அரச படைகளுக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சி வழங்குவது பற்றி ஊடகங்களின் ஊடாக அறிய முடிகின்றது. இது எங்களுக்கு மிகுந்த வேதனையும் கவலையையும் அளிக்கின்றது. அண்மையில் சிங்கள வானூர்திப் படையின் வவுனியாத் தளத்தில் ராடர் கருவியை இயக்குவதற்கும் பயிற்சி கொடுப்பதற்கும் இந்திய தொழில்நுட்ப வல்லுநர்கள் செயற்பட்டுவந்தமை முழு உலகிற்கும் தெரியவந்துள்ளது.

இவ்வாறான பயிற்சிகளும் உதவிகளும் வெளிநாடுகள் எந்த நோக்கத்திற்காக வழங்கினாலும் அரச படைகள் அதை தமிழ்மக்களைக் கொன்றொழிப்பதற்கு பயன்படுத்தி வருகின்றமையே யதார்த்தமாகும்.

வரலாற்று ரீதியாக இந்திய அரசு இலங்கைக்கு எவ்வாறான உதவிகளை வழங்கினாலும் அல்லது அழுத்தங்களை பிரயோகித்தாலும் இந்தியாவின் பூகோள நலனுக்கு எதிராக இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.

தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுவார்கள் என்பதை எம்மால் உறுதியாகக் கூற முடியும். இந்திய அரசுக்கு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நெருக்கடிகள் ஏற்பட்ட போதெல்லாம் இலங்கை அரசு இந்தியாவுக்கு எதிரான சக்திகளுடனேயே கூட்டுச் சேர்ந்ததுதான் கடந்தகால வரலாறாகும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களே இந்தியாவின் நலனுக்காக குரல் கொடுத்தும் செயற்பட்டும் வந்துள்ளமை வரலாற்று உண்மையாகும். இதை இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் ஆழமாக புரிந்து கொள்ளவேண்டும் என்பது எம்முடைய அவாவாகும்.

சிங்கள தேசத்திற்கு இந்திய அரசு உதவுவதை விட தமிழர் தேசத்திற்கு உதவுவதே இந்தியாவின் பாதுகாப்பிற்கு பலமாகும். எதிர்காலத்திலாவது உண்மையான நேச சக்திகளுக்கு உதவ முன்வரவேண்டும்.

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி எம்முடைய மக்களின் விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் அனைவருமே இன உணர்வு மிக்கவர்கள். அவர்கள் தமிழீழ மக்க ளுக்கு இன்னல்கள் ஏற்பட்டபோதெல்லாம் குரல் கொடுப்பதற்கு பின்னிற்க மாட்டார்கள். தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பதுபோல அவர்கள் எல்லோரும் தற்போது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழின உணர்வோடு எம்முடைய மக்களின் விடுதலைக்காக குரல்கொடுத்திருக்கின்றார். வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் நெருக்கடியினை எதிர்கொண்ட காலங்களில் எல்லாம் எம்முடைய மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு தமிழக முதல்வர் அவர்கள் ஒருபோதும் தவறுவதில்லை.

கடல் கடந்திருந்தாலும் அவர்கள் எல்லோரும் எம்முடைய உடன்பிறப்புக்களே. ஈழத்தில் தமிழ் மக்கள் துன்பப்படும்போது அவர்களால் அதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பது யதார்த்தமாகும்.

வானூர்திப் படைத் தாக்குதல் காரணமாக பதுங்கு குழிகளில் மறைந்தபடி பிரபாகரன் நீண்டகாலம் உயிர் வாழ முடியாது என்று சிறிலங்கா இராணுவத்தளபதி பொன்சேகா கூறியிருக்கிறார். இது அவருடைய பகற்கனவாகும்.

புலிகள் எவ்வாறான சுற்றிவளைப்புக்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வார்கள். உலகத் தமிழர்களின் ஆதரவு இருக்கும்வரை சிங்கள தேசம் எம்மை வெற்றி கொள்ள முடியாது என்றார். (ச-5)

## தமிழ் மக்களின் மனித...

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டின் முடிவில் அந்த நாட்டு தலைவர்களுடன் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது மனிமோகன் சிங் இக்கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கையில் இரண்டு வாரங்களுக்குள் போர் நிறுத்தத்தைக் கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக எம்.பிக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக பதவி விலகுவார்கள் என்று தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை மாலை தி.மு.க தலைவரும் முதல்வருமான கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ஜ.க., தே.மு.தி.க. கட்சிகள் பங்கேற்கவில்லை. இந்நிலையில் இலங்கை நிலைவரம் குறித்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த மன்மோகன் சிங் இலங்கையில் நிலவும் சூழ்நிலை இந்திய அரசுக்கு மிகவும் கவலையளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

அங்கு அதிகரித்துவரும் மோதல்கள் குறித்தும், பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்தும் உள் நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள் அதிகரித்திருப்பது குறித்தும், இந்திய மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது அவர்கள் துன்புறுத்தப்படுவது மற்றும் கொல்லப்படுவது குறித்தும் கவலை கொள்வதாகவும் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்நாட்டு அரசினால் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பிரதமர் மன்மோகன்.சிங்கிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)


கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினருமான திருமதி இந்திராணி சிறிரங்கன் அவர்களின் அன்புச் சகோதரன்

வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(அதிபர், யா/அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை)

அவர்கள் அகால மரணமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(C-1658)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.